
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper

மின்னிதழ்
2024 மே 11 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
92
தினகரன்

வரு. 92 இல. 112 | Saturday 11, May, 2024 | 12பக்கங்கள் | 50/-

## இத்தாலி மற்றும் ஜேர்மன்
# கடவுச்சீட்டுகளை தயாரிக்கும் ஆவணங்களுடன் ஒருவர் கைது



இத்தாலி மற்றும் ஜேர்மன் கடவுச்சீட்டுகளை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் ஒருதொகை ஆவணங்களுடன் வர்த்தகர் ஒருவர் நேற்றுக் (10) காலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் குற்றப் புலனாய்வு 06

## 2024 ஆண்டு இறுதிக்குள்
# 03 பில். அமெ. டொலர்களை கொண்டு வருவதே இலக்கு
## நிதி அமைச்சின் இலக்கை மும்மடங்காக அதிகரிக்க முடியும்
### திருமலை, மாங்குளம், பரந்தன், காங்கேசன்துறை பிரதேசங்களிலும் கைத்தொழில் பேட்டைகளிலும் முதலீடு



2024ஆம் ஆண்டு இறுதிக்குள் நிதி அமைச்சு வழங்கியுள்ள ஒரு பில்லியன் டொலர்கள் என்ற முதலீட்டு இலக்கை மூன்று மடங்குகளாக அதிகரித்து சுமார் 03 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான முதலீடுகளை இலங்கைக்குக் கொண்டுவர முடியுமென முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட நாட்டின் முதலீட்டுச் சூழல் தற்போது 200 வீதம் மேம்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முதலீடுகள் நாட்டுக்குள் வருவதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை, நிதி ஸ்திரத்தன்மை மற்றும் நாட்டின் எதிர்காலம் பற்றிய உறுதிப்பாடு ஆகியவை இருக்க வேண்டுமெனவும், தற்போது இந்நாட்டில் ஸ்திரத்தன்மை நிலவுவதை நாட்டுக்கு வரும் முதலீடுகள் உறுதிப்படுத்துவதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். 06

# வீடமைப்பு மற்றும் சர்வதேச நிர்மாண கண்காட்சியில் ஜனாதிபதி பங்கேற்பு



இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட Housing & Construction International Expo – 2024 கண்காட்சியை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நேற்று (10) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பார்வையிட்டார். 06

## அமெரிக்க துணை செயலாளர்
# டொனால்ட் லூ இலங்கை வருகிறார்



இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் துணை செயலாளர் டொனால்ட் லூ (Donald Lu) இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். 06

# இரத்தினபுரி, தும்பறை பகுதியில் தொழிலாளர் மீதான தாக்குதல்
## சட்ட நடவடிக்கை எடுக்குமாறு IGP க்கு அமைச்சர் ஜீவன் கடிதம்



இரத்தினபுரி, தும்பறை 82ஆம் பிரிவிலுள்ள தோட்ட அதிகாரி மற்றும் காவலாளி ஆகியோர் இணைந்து தோட்ட தொழிலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மாஅதிபருக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் பி.சக்திவேல், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் சின்னையா இராஜமணி ஆகியோர் தாக்குதலுக்கு உள்ளான தொழிலாளர்களை சந்தித்து கலந்துரையாடினர். 06

# சிரேஷ்ட பிரஜைகளின் வைப்புக்கு வட்டி வீதத்தை அதிகரிக்க திட்டம்
## அறிக்கை கோருகிறார் ஜனாதிபதி ரணில்



சிரேஷ்ட பிரஜைகளின் வைப்புத்தொகைக்கான வட்டி வீதத்தை அதிகரிப்பது தொடர்பில் நடைமுறைப்படுத்த வேண்டிய வழிமுறைகள் அடங்கிய விரிவான அறிக்கையை தன்னிடம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டியவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதியிடமிருந்து கிடைக்கப்பெற்ற கோரிக்கை மற்றும் 06

## சபாநாயகர் முன்னிலையில்
# முஜிபுர் ரஹ்மான் MPயாக நேற்று பதவிப்பிரமாணம்



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் உறுப்பினராக மொஹமட் முஜிபுர் ரஹ்மான் நேற்று (10) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். சபாநாயகர் முன்னிலையில் சத்தியப் 06

# தமிழ் மக்களின் அபிலாஷைகளை தேசிய நல்லிணக்கமே நிறைவேற்றும்
## அதுவே சாத்தியமான வழிமுறை; அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



யாழ். விசேட நிருபர்

தமிழ் மக்களின் அபிலாஷைகளை தேசிய நல்லிணக்கமே நிறைவேற்றிக் கொடுக்கும். அத்துடன் அதுவே சாத்தியமான வழிமுறையாகவும் உள்ளதென ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா 06

# 13ஆம், 14ஆம் திகதிகளில் பாராளுமன்றம் கூடுகிறது



பாராளுமன்றம் மே மாதம் 13ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய நாட்களில் கூடவிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் (09) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மே மாதம் 13ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 9.30பாராளுமன்றம் கூடவிருப்பதுடன் மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. 06

# இரத்தினபுரி, தும்பறை 82ஆம் பிரிவில் பெண் தொழிலாளி மீது தாக்குதல்
## அறிக்கை கோருகிறார் சாகல
### ஐ.தே.க. அமைப்பாளர் சுப்பையா ஆனந்தகுமாரின் வேண்டுகோளுக்கமைய துரித நடவடிக்கை



இரத்தினபுரி, தும்பறை 82ஆம் பிரிவிலுள்ள தோட்ட அதிகாரி மற்றும் காவலாளி ஆகியோர் இணைந்து தோட்ட தொழிலாளியான பெண் ஒருவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பின் அது தொடர்பான முழுமையான 06

## 10 ஏக்கரிலிருந்து 50 ஏக்கர் வரை
# தேயிலை தோட்டங்களுக்கும் உரமானியம் அதிகரிக்க முடிவு



தேயிலைத் தோட்டங்களுக்கு தற்போது வழங்கப்படும் உர மானியத்தை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி உர மானியத்தை 10 ஏக்கரிலிருந்து 50 ஏக்கர்வரை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 06



06
## ஜனாதிபதித் தேர்தலில்
## ஒரு கோடியே 70 இலட்சம் பேரளவில் வாக்களிக்க தகுதி

## கட்சியிலிருந்து நீக்கப்பட்டமை
# டயனா தாக்கல் செய்த மனுவை 28ஆம் திகதி எடுக்க தீர்மானம்
## உயர் நீதிமன்றம் நேற்று அறிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேயை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்யக்கோரி டயனா கமகேயால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் 28ஆம் திகதி எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் நேற்று (10) தீர்மானித்துள்ளது.

நீதியரசர்கள் காமினி அமரசேகர, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் 06

# ஒலிம்பிக் தீபத்தை ஏந்தும் முதல் இலங்கைத் தமிழர்
## சர்வதேச ரீதியில் அங்கீகாரம்



சர்வதேச ஒலிம்பிக் போட்டிகள் இவ்வருடம் ஜூலை மாதம் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதில் இலங்கைத் தமிழர் ஒருவருக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

ஒலிம்பிக் தீப்பந்தத்தின் நீண்ட அஞ்சலோட்ட சுற்றுப்பயணம் கடந்த புதன்கிழமை கிரீஸிலிருந்து பிரான்ஸை சென்றடைந்தது.

சர்வதேச ரீதியில் 10,000 பேருக்கு 06

## O/L பரீட்சையில் முறைகேடு
# பரீட்சைகள் ஆணையாளர் சி.ஐ.டியில் முறைப்பாடு



தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சையில் (G.C.E. O/L Examination) இடம்பெற்ற முறைகேடு தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்படவுள்ளது.

இம்முறைகேடு தொடர்பில் நேற்று (10) முறைப்பாடு செய்யவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். 06

# கிறிப்டோ நாணய பயன்பாடு மிகவும் ஆபத்து நிறைந்தது
## பொதுமக்களுக்கு மத்திய வங்கி எச்சரிக்கை



நாட்டில் கிறிப்டோ கரன்சி எனப்படும் டிஜிட்டல் நாணய அலகு சட்ட ரீதியானதல்ல என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கிறிப்டோ நாணயம் அதிகமாக பயன்படுத்தப்படுவதில்லையெனவும் இந்த நாணய அலகு பயன்பாட்டில் ஆபத்து காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். 06

# போலி வாக்குறுதிகளுக்காக மக்கள் ஏமாற மாட்டார்கள்
## நாமல் ராஜபக்ஷ!



நாட்டில் ஆட்சிக் கவிழ்ப்பை முன்னெடுப்பதற்காக பலர் மே 09 காலிமுகத்திடல் போராட்டத்துக்கு வழிவகுத்ததாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், “மே 09 தாக்குதல் இடம்பெற்று இன்றுடன் 02 வருடங்கள் பூர்த்தியாகின்றன. போராட்டத்தை விட அதனை முன்னெடுத்தவர்கள் பயங்கரவாதிகளாக சித்தரிக்கப்பட்டுள்ளனர். 06










# பாரம்பரிய சிலம்பாட்டப் போட்டி

யாழில் நடைபெற்ற சிலம்பாட்டப் போட்டி நிகழ்வில் இளைஞர் விவகாரங்கள் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க கலந்துகொண்டதுடன் இவருடன் யாழ். மாவட்ட அரச அதிபர், சிலம்பு உலக தலைவர், கொக்குவில் இந்து கல்லூரி ஆரம்ப பாடசாலை அதிபர், யாழ். பிரதேச இராணுவ அதிகாரி மற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டர்.











ஷெய்கு உஸ்மான் வலியுல்லாஹ் 207வது வருடாந்த உரூஸ் முபாரக் மற்றும் கொடியேற்றம் நேற்றுமுன்தினம் கொழும்பு தெவட்டகஹ பள்ளிவாசலில் வெகுசிறப்பாக ஆரம்பமானது. தெவட்டகஹ பள்ளிவாசல் தலைவர் றியாஸ் சாலி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இந்தியாவைச் சேர்ந்த அஷ்ஷெய்யத் அப்துல் கரீம் தங்கல் கலந்து கொண்டு கொடியேற்றி துஆப் பிரார்த்தனை நிகழ்த்தினார். இதில் தெவட்டகஹ பள்ளிவாசல் பிரதம இமாம் மௌலவி இக்பால், கலாநிதி அஷ் ஷெய்த் ஹசன் மௌலானா மற்றும் குருந்துவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆலோக பண்டார உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர். எதிர்வரும் 19ஆம் திகதி வரை குர்ஆன் தமாம் செய்யப்பட்டு ஷெய்கு உஸ்மான் வலி மௌலூத், மாதிஹுர் ரஸூல் என்பன ஓதப்பட்டு கந்தூரி வைபவம் நடைபெறவுள்ளது.





மிஷன் டி விஷன் கலைக் கழகம் புகைப்படப்பிடிப்பாளர்கள், வீடியோ படப்பிடிப்பாளர்கள் சங்கத்தின் 24, ஆவது வருடத்தை முன்னிட்டு ஆலோசனைக் கூட்டமும் கலை நிகழ்வுகளும் சுகததாச விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதன்போது கேக் வெட்டி ஆண்டு நிறைவு கொண்டாடப்பட்டது. இலங்கையின் பல்வேறு பகுதிகளிருந்தும் புகைப்பட கலைஞர்கள் இதில் பங்குபற்றினர்.



ஆசியான் அமைப்பின் ஐந்து நாடுகளின் தூதுவர்கள் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவை கண்டி காரியாலயத்தில் வைத்து சந்தித்தனர். இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மே 11 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්


தொழுகை நேரம்

சுபஹ் - 04.35
ளுஹர் - 12.08
அஸர் - 03.28
மஃரிப் - 06.20
இஷா - 07.33

இன்றைய சுபதினம்

குரோதி வருடம் சித்திரை 28

ராகுகாலம் : காலை : 8.54 - 10.24வரை
சுபநேரம் : பகல் : 2.54 - 4.24வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



### பேருவளை குப்பைமேடு பிரச்சினை

# பிரதமர் தினேஷின் பணிப்புரையில் 14ஆம் திகதி விசேட குழு விஜயம்

## பிரதமருக்கு இம்தியாஸ் MP நன்றி தெரிவிப்பு



பேருவளை நகர சபைக்குட்பட்ட பகுதியில் சேகரிக்கப்படும் கழிவுகளை வத்திமிராஜபுர கிராமத்தில் உள்ள காணியில் கொட்டுவதால் ஏற்பட்டுள்ள பாரிய சுகாதார பிரச்சினைக்கு தீர்வு காணும் விசேட கலந்துரையாடல் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் (09) நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், பாராளுமன்றத்தில் பிரதமரிடம் விடுத்த கோரிக்கையையடுத்து நடைபெற்ற கலந்துரையாடலுக்கு கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, உள்ளூராட்சி அமைச்சின் அதிகாரிகள், பேருவளை பிரதேச செயலாளர், பேருவளை நகர சபை அதிகாரிகள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை, பொலிஸ், தேசிய சுகாதார நிறுவனம், மாகாண சபை திண்மக்கழிவு முகாமைத்துவ அதிகார சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை போன்ற அனைத்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இப்பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகளை கொட்டும் இடங்களை உடனடியாக ஆராய்ந்து உரிய இடத்திலிருந்து அப்புறப்படுத்துமாறும் பின்னர் குப்பைகளை சரியாக வகைப்படுத்தி உரிய முறையில் அகற்றி பொதுமக்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறும் பொறுப்புவாய்ந்த பிரிவுகளுக்கு பிரதமர் பணித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (14) பேருவளை பிரதேசத்துக்குச் சென்று ஆராயுமாறும் பிரதமர் பணித்துள்ளார்.


தற்போது குப்பை கொட்டப்படும் காணிகளை பயன்படுத்தி வழமையான குப்பைகளை மீள்சுழற்சி செய்யும் செயற்றிட்டமொன்றை ஆரம்பிப்பது தொடர்பிலும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த ஆலோசனை வழங்கினார். கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்தமை தொடர்பில் பிரதமருக்கு பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நன்றி தெரிவித்தார். அத்துடன் நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு ஏற்ப செயற்படுமாறு அதிகாரிகளிடம் விசேட வேண்டுகோளும் விடுத்தார்.

---

தினகரன்
THINAKARAN
තිනකරන්

# 92

வருடங்களுக்கு முன்
## தினகரன்
இன்று 11 மே 1932


மழை வீழ்ச்சி.
3 மணி நேரத்தில் 10 அங்குல மழை.
விழுந்த வீடு.
தெருக்களில் வெள்ளப் பிரவாகம்.

### மழை வீழ்ச்சி.

3 மணி நேரத்தில்
10 அங்குல மழை.

### விழுந்த வீடு.

**தெருக்களில் வெள்ளப் பிரவாகம்.**

நேற்றுக்காலை கொழும்பில் மூன்றரை மணித்தியால நேரம் இடைவிடாது கடும்மழை பொழிந்தது. காற்றும் இடையிடையே உரமாய் அடித்தது. கொழும்பு அப்சேவேட்டறியில் 10.43 அங்குல மழை வீழ்ந்தது எனக் கணக்கிடப்பட்டது. இந்தவிதமான மழை வீழ்ச்சி முன் ஒருபோதும் அப்பகுதியில் சம்பவிக்கவில்லை. இதற்கு முன் 1876ம் ஆண்டில் கோட்டையில் 11.90 அங்குல மழை பெய்தது. இலங்கையின் வடகிழக்குப் பக்கத்தில் உள்ள நெடுங்கேணியில் 1897ம் ஆண்டில் ஒருமுறை 24 மணி நேரத்தில் 31.72 அங்குல மழை வீழ்ந்திருக்கிறது.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

---

# மைத்திரியின் கூற்று தொடர்பில் ஆரம்பக்கட்ட விசாரணை

**அறிக்கை ஜூலை 26 இல் சமர்ப்பிக்க உத்தரவு**



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள கூற்று தொடர்பான ஆரம்பக்கட்ட விசாரணைகளின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை, ஜூலை 26ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு மாளிகாகந்த நீதவான் திருமதி லோச்சனா அபேவிக்கிரம குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு நேற்று (10) உத்தரவிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டவரை தமக்கு தெரியுமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்து தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் அண்மையில் அவரிடம் வாக்குமூலம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

### ஜனாதிபதி தலைமையில் ஜூன் 25 இல்

# 'DIGIECON உலகளாவிய முதலீட்டு மாநாடு' IT துறை இளைஞர்களுக்கு சிறந்த வாய்ப்பு

## தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலின் கீழ் DIGIECON2023 திட்டத்துடன் இணைந்து நடத்தப்படும் DIGIECON உலகளாவிய முதலீட்டு உச்சி மாநாடு 2024 (DIGIECON Global Investment Summit) என்பது இலங்கையில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்கு ஒரு சிறப்பான வாய்ப்பாகும் என்று தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டின் மூலம் பல வெளிநாட்டு முதலீடுகளை நாட்டிற்கு பெற்றுக் கொள்ள முடியும் எனவும், இதன் மூலம் தகவல் தொழில்நுட்ப துறையின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு உயர் பங்களிப்பை வழங்க முடியும் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்கும் "DIGIECON 2023" திட்டத்துடன் இணைந்தாக இலங்கை தொழில்நுட்ப அமைச்சினால் நடத்தப்படும் DIGIECON உலகளாவிய முதலீட்டு மாநாடு குறித்து தெளிவுபடுத்தும் ஊடக மாநாடு நேற்று (10) ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்றது. இங்கு கருத்துத் தெரிவிக்கும் போதே தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் இதனைக் குறிப்பிட்டார்.



மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் கூறியதாவது:

"DIGIECON 2023" திட்டத்துடன் இணைந்ததாக நடைபெறவுள்ள DIGIECON உலகளாவிய முதலீட்டு மாநாடு எதிர்வரும் ஜூன் மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு டிஜிட்டல் முதலீட்டு மாநாட்டை நடாத்துவதன் மூலம் இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள DIGIECON திட்டத்தை மேலும் விரிவுபடுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இதன் மூலம் தகவல் தொழில்நுட்பத்துறையில் ஈடுபட்டுள்ள இளைஞர்களும் பாடசாலை மாணவர்களும் தமது துறையில் முன்னேற சிறந்த வாய்ப்பு உள்ளது.

இந்த மாநாட்டின் மூலம் இலங்கையை சர்வதேச ரீதியில் கொண்டு செல்ல எதிர்பார்க்கிறோம். இதன்படி சர்வதேச சமூகம் இந்நாட்டில் முதலீடு செய்ய வாய்ப்பு கிடைக்கும். இத்திட்டங்கள் மூலம் நமது நாட்டில் விசேட திறமை கொண்ட இளைஞர்களுக்கு சிறந்த வாய்ப்பு

06

---

### கொழும்பில் இயங்கி வந்த போலி

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் சுற்றிவளைப்பு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனுமதிப்பத்திரமின்றி இராஜகிரிய பிரதேசத்தில் இயங்கி வந்த போலி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனமொன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளினால் கடந்த 08ஆம் திகதி சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போலந்தில் தொழில் வழங்குவதாக பணம் பெற்றுக்கொண்ட இந்த நிறுவனம் இராஜகிரிய பிரதேசத்தில் வீசா ஆலோசனை மையம் என்ற போர்வையில் இயங்கி வந்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

போலந்தில் தொழில் வழங்குவதற்காக நிறுவனத்துக்கு ஒரு இலட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் உறுதியளித்தபடி தொழில் வழங்கப்படவில்லை எனவும் ஒருவர் பணியகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அதன்படி, சோதனை நடத்தப்பட்டு, நிறுவனத்தின்

06

---

### பெண்களுக்கான முன்னுரிமையுடன்

# தொழில் துறையில் முழுமையான மாற்றத்துடன் புதிய சட்டமூலம்

## சபையில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் தொழில் துறையில் முழுமையாக மாற்றங்களை ஏற்படுத்தும் புதிய தொழில்துறை சட்டமொன்றை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பான சட்டமூலம் தற்போது சட்டமூலம் தயாரிப்பு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், பெண் தொழிலாளர்களை அதிகளவில் தொழில்துறையில் இணைத்துக்கொள்ளும் வகையில் இதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சாப்பு மற்றும் அலுவலக ஊழியர்கள் தொடர்பான திருத்த சட்டமூலம் மீதான விவாதம் நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. இதன்போது விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

உலகம் தற்போது அறிவு நிலைக்கு பிரவேசித்துள்ளது.அதன் பின்னர் நவீன நிர்மாண உலகத்திற்கு நாம் செல்ல முடியும். செயற்கை சிந்தனைகளால் உலகில் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பது தொடர்பில் எமக்குத் தெரியாது. சாப்பு மற்றும் அலுவலக ஊழியர்கள் தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு இணங்க பெண்கள் இரவு எட்டு மணி வரை மாத்திரமே சேவையில் ஈடுபட முடியும்.

இரவு நேரத்தில் அவர்களுக்கு சேவையில் ஈடுபட முடியாது. நாட்டின் தொழில் சட்டம் மிகவும் வலிமையானது.

1954ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்த சட்டம் காலத்துக்கு பொருத்தமான வகையில் மாற்றம் பெற வேண்டியுள்ளது. கைத்தொழிற்சாலைகள், ஹோட்டல்கள், விமான சேவைகள் உள்ளிட்ட துறைகளில் இந்த சட்டத்திற்கு அப்பால் பெண்களுக்கு தொழில்

06

---

### பெண் தொழிலாளி தாக்கப்பட்ட விடயம்

# வடிவேல் சுரேஷ் எம்.பி. மனோவுடன் கள விஜயம்



இரத்தினபுரி, தும்பறை 82ஆம் பிரிவில் தோட்ட முகாமைத்துவ அதிகாரி, பெண் ஒருவரை தாக்குவதை போன்ற காணொளி சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டதை தொடர்ந்து நிலைமை தொடர்பில் ஆராய்வதற்கு நேற்று பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுடன் கள விஜயமொன்றை மேற்கொண்டார்.

இதன்போது தோட்ட முகாமைத்துவ அதிகாரி மற்றும் பாதிக்கப்பட்ட பெண்ணிடமும் பிரதேச மக்களிடமும் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடியதோடு, சட்டம் கடுமையாக்கப்பட்டு குற்றவாளியான தோட்ட முகாமைத்துவ அதிகாரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தினார். இந்த விடயம் தொடர்பில் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். தோட்ட அதிகாரியின் கீழ்த்தரமான இந்நடவடிக்கை பெருந்தோட்ட நிர்வாகங்களில் அடக்கு முறையில் உச்சம், நாட்டின் சட்டம் அனைவருக்கும் பொதுவானது.

தொடர்ந்து இவ்வாறு செயல்பட்டால் பதில் சாட்டை அடியாகவே இருக்கும் என எச்சரித்தார். மேலும் தோட்ட அதிகாரி பாதிக்கப்பட்ட பெண்ணிடம் பகிரங்கமாக மன்னிப்பு கூற வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கள விஜயத்தில் இணைந்து கொண்டிருந்தார்.

---

### இலங்கையின் முதலாவது

# தேசிய சிறந்த வர்த்தக நாமங்கள் (Brands) விருது வழங்கும் விழா

IDB

## இம்மாத இறுதியில் நடத்த ஏற்பாடு

கைத்தொழில் அமைச்சும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இணைந்து அரச அனுசரணையுடன் தேசிய சிறந்த வர்த்தக நாமங்கள் விருது வழங்கும் விழாவை முதன்முறையாக இலங்கையில் நடத்துவதற்கு தயாராகி வருகின்றன. இலங்கையில் வர்த்தக நாமங்களுக்கு விருது வழங்கும் விழாக்கள் பல இடம்பெற்றுள்ள போதிலும், தொழில் துறைக்கான வர்த்தக நாமங்கள் விருது வழங்கும் விழா நடைபெறாததால், இலங்கையின் உற்பத்தித் தொழில்கள் தொடர்பான வர்த்தக நாமங்களை சர்வதேச வர்த்தக சந்தைக்கு எடுத்துச் செல்வதற்கு தடையாக இருந்தது.

அது தொடர்பாக கவனம் செலுத்திய கைத்தொழில் அமைச்சர் டாக்டர் ரமேஷ் பத்திரணவின் ஆலோசனையின் பெயரில்

06

---

### நாட்டின் எதிர்கால நலன்களுக்காக

# எந்த தரப்புடன் கைகோர்க்கவும் எவரையும் கைவிடவும் தயார்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் எதிர்கால நலனுக்காக எந்த தரப்புடனும் கைகோர்க்கவும் எவரையும் கைவிடவும் தயாராகவுள்ளதாக முன்னாள் அமைச்சரும் பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகருமான பெசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என நாம் யோசனையொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்வைத்துள்ளோம். அது தொடர்பில் அவர் எதிர்வரும் 18ஆம் திகதிக்குப் பின்னர் உறுதியாக குறிப்பிடுவதாக தெரிவித்துள்ளார் என்றும் பெசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் ஒரு தரப்பினர் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதாகவும்,பிறிதொரு தரப்பினர் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் தெரிவிக்கப்படுவது உண்மைக்குப் புறம்பானது. கட்சியின் சகல உறுப்பினர்களுடனும் கலந்துரையாடியே அரசியல் ரீதியிலான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன என தெரிவித்த அவர், கட்சியின்

06

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 28ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 02

### குறள் தரும் சிந்தனை



ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்

தமக்குரிய கடமைகளைக் கண்ணியத்துடன் ஆற்றுகின்ற சான்றோர் எல்லாக் கடல்களும் தடம்புரண்டு மாறுகின்ற ஊழிக்காலம் ஏற்பட்டாலும்கூடத், தம்நிலை மாறாத கடலாகத் திகழ்வார்கள்.

## ஊடகத்துறை ஆற்றலை மேம்படுத்துவது வாசிப்பு

ஊடகம் என்பது இன்று உலகையே ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது என்றுதான் கூற வேண்டியுள்ளது. அன்றைய காலத்தில் ஊடகம் என்பது கல்வியறிவு உள்ளவர்களுக்கு மாத்திரமே உரித்தானதாக இருந்தது. அக்காலத்தில் ஊடகங்களை நாடுகின்ற மக்களும் மிகவும் சொற்பமானவர்களாகவே இருந்தனர்.

ஆனால் இன்றைய காலத்தில் நிலைமை அவ்வாறாக இல்லை. மக்களில் பெரும்பாலானோர் ஏதோவொரு வகையில் ஊடகக் கவர்ச்சிக்கு உட்பட்டவர்களாகவே இருக்கின்றனர். உலகின் நடப்பு விவகாரங்களை அறிந்து கொள்வதில் இக்காலத்தில் மக்கள் காண்பிக்கின்ற ஆர்வம் மிகவும் அதிகம்.

சாதாரண பாமர மக்களும் கூட உலக நடப்புகளையும், உள்நாட்டு அரசியலையும் மற்றவர்களுடன் விவாதிக்கின்ற அறிவைக் கொண்டிருக்கின்றார்கள். உலகெங்கும் இடம்பெறுகின்ற பரபரப்பான தகவல்களை அவர்கள் உடனுக்குடனே அறிந்து கொள்கின்றார்கள்.

மக்கள் இன்றெல்லாம் கைத்தொலைபேசி ஊடாக ஊடகங்களுக்குள் மூழ்கிக் கிடக்கின்றனர். அவர்கள் உலக நடப்புகள் தொடர்பான செய்திகளை மாத்திரம் நோக்குவதில்லை. அதற்கும் அப்பால் பலவிதமான தகவல்களையும் காட்சிகளையும் கைத்தொலைபேசி வழியாக நோக்குகின்றனர். அவற்றில் நல்லவை மாத்திரமன்றி, தீயவையும் அதிகம் உள்ளன. சுருங்கக் கூறுவதாயின் உலக நடப்புகளை மக்களின் உள்ளங்கைக்குள் கொண்டுவந்து விட்டது ஸ்மாட் தொலைபேசி.

இன்றைய இலத்திரனியல் ஊடகங்களில் பெரும்பாலானவை ஒழுக்கவிழுமியங்களைத் தாண்டி தறிகெட்டுச் சென்று கொண்டிருந்தாலும், பத்திரிகை ஊடகமென்பது இன்னுமே தனது தனித்துவத்தை இழக்காமல் பயணம் செய்து கொண்டிருப்பது வியப்பானதும், பாராட்டுக்குரியதுமாகும்.

வெகுஜன ஊடகங்களில் பணியாற்றுவதற்கு இன்று இளவயதினர் பலரும் ஆசைப்படுகின்றனர். அச்சு ஊடகங்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் பணியாற்றுவதில் அதிகமானோர் நாட்டம் கொள்கின்றனர். அவர்களில் அனைவரும் ஆற்றலுள்ளவர்கள் என்று கூறுவதற்கில்லை. மொழி ஆற்றல், ஊடக ஞானம் போன்றவற்றைக் கொண்டிருக்காதவர்களும் ஏதோவொரு கவர்ச்சியின்பால் ஈர்க்கப்பட்டு இத்துறைக்குள் பிரவேசிப்பதுதான் வேடிக்கையான விடயமாகும்.

ஊடகத்துறை என்றால் என்ன? ஊடகத்துறையில் மொழியின் செல்வாக்கு எத்தகையது? ஊடகங்களில் மக்கள் எதிர்பார்ப்பவை எவை? ஊடகத்துறையில் வழுக்கள் ஆகக் கொள்ளப்படுகின்ற விடயங்கள் எவை? செய்திகளையும் கட்டுரைகளையும் பிரசுரிக்கின்ற போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் எவை? பிரசுரத்தின் போது தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள் எவை? ஆக்கங்கள் எவ்வாறு அமைய வேண்டும்? சுயதணிக்கையின் வரம்பு எது?

இவ்வாறாக ஏராளமான முக்கிய வினாக்கள், ஊடகத்துறையில் புதிதாகப் பிரவேசிக்கின்ற ஒருவருக்கு எழுவது அவசியம். இது போன்ற ஏராளமான வினாக்களுக்குரிய தெளிவு ஒருவரிடம் ஏற்பட்டால் மாத்திரமே அவர் தகுதிவாய்ந்த ஊடகவியலாளராக வளர முடியும்.

ஊடகத்துறை தொடர்பான ஞானமும் அனுபவமும் இல்லாவிடினும், அத்துறைக்குள் பிரவேசித்த பின்னராவது கூட அவர்கள் ஊடகத்துறை சார்ந்த விடயங்களைத் தேடிப் பெற்றுக் கொள்வது அவசியம். தங்களால் பதிவிடப்படுகின்ற செய்திகள் மற்றும் ஆக்கங்கள் பொதுமக்களைச் சென்றடைகின்றன என்பதைக் கருத்திற் கொண்டு ஊடகவியலாளர்கள் நெறிதவறாது பணியாற்ற வேண்டியது அவசியமாகின்றது. தகவல்களைத் தவறாகப் பதிவிடுகின்ற போது, அத்தகவல்கள் சமூகத்தில் பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடுமென்பதை ஊடகவியலாளர்கள் முதலில் புரிந்து வைத்திருத்தல் வேண்டும்.

ஊடகங்களில் முதலில் கவனம் செலுத்தப்பட வேண்டியது மொழிக்குரிய முக்கியத்துவம் மீது ஆகும். அச்சு ஊடகமாகட்டும் அல்லது இலத்திரனியல் ஊடகமாகட்டும் இலக்கண சுத்தமான மொழி இன்றேல் அந்த ஊடகம் நன்மதிப்பைப் பெறப் போவதில்லை. மொழிச் சுத்தம் இல்லாவிடில் ஊடகங்கள் பரிகாசத்துக்கு உரியவை ஆகி விடலாம்.

எனவே ஊடகங்களில் மொழியை நாம் எவ்வாறு கையாள வேண்டும் என்பதைத்தான் முதலில் பார்க்க வேண்டியுள்ளது. செய்திகள் மற்றும் ஆக்கங்களில் மொழியை நாம் பிரயோகிப்பதென்பது 'எழுதப்பட்ட ஒரு வரையறை' அல்ல என்பதை ஊடகவியலாளர்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். தொழில் அனுபவம் காரணமாக படிப்படியாகவே மொழித்திறமையை ஊடகவியலாளர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் சரியான வழி.

தமிழ் ஊடகங்களைப் பொறுத்தவரை உலகின் இன்றைய முதல்தர ஊடகவியலாளர்களை எடுத்துக் கொள்வோமானால், அவர்களில் பலர் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்கள் அல்லர். சிறிய வயதில் இருந்து பத்திரிகைகளை கருத்தூன்றி வாசித்து வந்ததனாலேயே அவர்களெல்லாம் தங்களது மொழித்திறமையை வளர்த்துக் கொண்டனர் என்பதுதான் உண்மை.

இலங்கை, இந்திய தமிழ் ஊடகங்களில் முன்னர் ஜாம்பவான்களாகத் திகழ்ந்தவர்களில் பலர் வாசிப்பு ஞானத்தினாலேயே தங்களை வளர்த்துக் கொண்டவர்களாவர். அவர்கள் சிறப்பான ஊடகப் பணியாற்றி, பத்திரிகைத்துறைக்கான செல்நெறியையும் வகுத்துச் சென்றிருக்கின்றனர். அவர்கள் வகுத்துச் சென்ற பாணியையே இன்றைய ஊடகவியலாளர்களும் தொடருகின்றனர்.

ஆகவே தொடர்ச்சியான வாசிப்புத்தான் சிறந்ததொரு ஊடகவியலாளனை உருவாக்குகின்றது என்பதை இங்கு நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

editor.tkn@lakehouse.lk

# கிழக்கில் களைகட்டுகிறது கண்ணகை அம்மன் சடங்கு



## இலங்கையின் பண்டைக்கால வரலாற்றுடன் தொடர்புடைய 'பத்தினி தெய்யோ' அம்மன் வழிபாடு

வைகாசி பிறந்துவிட்டால் கிழக்கின் பட்டிதொட்டியெல்லாம் பறையொலி முழங்க, குழல் நய ஓசையெழுப்ப வைகாசிப் பொங்கல் நடைபெறுவது வழமை. கிழக்கில் பெரும்பாலான தமிழ்க் கிராமங்கள் பாரம்பரிய இச்சடங்கினால் களைகட்டும்.

கிழக்கில் பெரும்பாலான கண்ணகி ஆலயங்களில் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை இச்சடங்கு ஆரம்பமாகிறது.

வடக்கில் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திலும் இச்சடங்கு சிறப்பாக பாக்கு தெண்டலுடன் ஆரம்பமாகியிருக்கிறது.

பூம்புகாரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டிலே பிறந்து பாண்டிய நாட்டிலே அரசியல் புரட்சி செய்து சேரநாட்டிலே தெய்வமாகிய கண்ணகை அம்பாள் சிங்கள மக்கள் மத்தியில் 'பத்தினி தெய்யோ' என இன்றும் வழிபடப்பட்டு வருவதைக் காணலாம்.

கண்ணகி வணக்கம் இலங்கையின் இரண்டு இனத்தாரிடையே (தமிழர், சிங்களவர்)வளர்க்கப்பட்டு வந்தது. கண்ணகை அம்மன் என்றும் பத்தினி தெய்யோ என்றும் வழங்கப்பட்டு வந்தது.

கண்ணகி தமிழரிடையே ஒரு புதுத்தெய்வமாக உருப்பெற்ற கதையை சிலப்பதிகாரம் சுவைபடக் கூறுகிறது.

வானோர் வடிவில் வந்த கோவலனோடு தெய்வ விமானமேறி கண்ணகி வானகம் சென்ற காட்சியைக் கண்ட வேடுவர்கள் அவளைத் தெய்வமாகப் போற்றினார்கள்.

சிறு குடியீரே சிறு குடியீரே .... என்ற சிலப்பதிகார குன்றக்குரவைப் பாடலைப் பாடி வேங்கை மரத்தின் கீழ் எடுத்த முதற் சடங்கு கண்ணகி சடங்காகும். அதனையொட்டி கண்ணகி சடங்கு முறை வழக்கிற்கு வந்தது.

சேரன் செங்கூட்டுவன் இமயத்திலிருந்து கல்லெடுத்து வந்து கங்கையில் நீராட்டி அக்கல்லிலிருந்து கண்ணகியின் சிலை வடித்து தனது தலைநகராம் வஞ்சிமா நகரில் அமைத்த ஆலயத்தில் பிரதிஷ்டை செய்தான். அங்கு இந்திரவிழா எடுத்தான்.

இந்த விழாவிற்கு குடகக்கொங்கரும் மாளுவவேந்தனும் கடல்சூழிலங்கை கயவாகு வேந்தனும் வந்திருந்ததாக சிலப்பதிகாரம் கூறி நிற்கிறது. இச்சிலப்பதிகாரத்தையும் பழைய ஏடுகளையும் வைத்து கிழக்கில் பல காப்பியங்களும் நூல்களும் வெளிவந்தன. கண்டி அரசன் இரண்டாம் இராசசிங்கன் காலத்தில் (16291637) பாடப்பெற்ற தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஊர்சுற்றுக் காவியத்தில் மட்டக்களப்புப் பிராந்தியத்தில் 30 கண்ணகை அம்மன் ஆலயங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.அவற்றில் அங்கணாமைக்கடவை (வெளியிலிருந்தும்) முதலூராகக் குறிப்படப்பட்டுள்ளது.எனவே அதுவே முதல் ஆலயமாகக் கொள்ளலாம்.

"பட்டி நகர் தம்பிலுவில் வீரமுனை காரைநகர்
பவுசுபெறு கல்முனை கல்லாறெருவில் மகிளுர்
செட்டிபாளையம் புதுக்குடியிருப்பு
செல்வமுறு மகிழடித்தீவு முதலைக்குடா
அட்ட திக்கும் புகழும் வந்தாறுமூலை நகர்
மட்டவிழ் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை
மனதில் நினைக்க வினை மாறி ஓடிடுமே!"

என ஊர்சுற்றுக்காவியம் கூறுகிறது.

2024 ஆம் ஆண்டுக்கான இப்பாரம்பரிய சடங்கு கண்ணகித் தாயின் அருளால் சிறப்பாக அமைய பிரார்த்திக்கின்றோம்.





விபுலமாமணி **வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறுப் நிருபர்)

# காத்தான்குடி மீடியா போரம் உறுப்பினர்கள், சவூதிக்கான புதிய இலங்கைத் தூதுவர் சந்திப்பு

காத்தான்குடி மீடியா போரத்தின் உறுப்பினர்களுக்கும் சவூதி அரேபியாவிற்கான புதிய இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டு விரைவில் கடமைகளை பொறுப்பேற்க பயணமாகவுள்ள தற்போதைய வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் சட்டமுதுமாணி ஓ.எல்..அமீர் அஜ்வத் அவர்களுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் போரத்தின் ஆயுட்காலத் தலைவர் மௌலவி எஸ். எம். எம். முஸ்தபா மற்றும் செயலாளர், பொருளாளர், உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். இதன் போது சட்டமுதுமாணி ஓ.எல்.அமீர் அஜ்வத் அவர்களுக்கு போரத்தினால் பொன்னாடை போர்த்தி மற்றும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவம் அளிக்கப்பட்டது. மேலும் புதிய தூதுவர் ஓ.எல்.அமீர் அஜ்வத் அவர்கள் தன துரையில் ஊடகங்களின் முக்கியத்துவம், ஊடகங்களினூடாக சமூக நல்லிணக்கத்துக்காக பணியாற்றுதல் மற்றும் ஊடகங்களினூடாக சமூக மாற்றம் போன்ற பல்வேறு விடயங்களை வலியுறுத்தினார்.





**எம்.எஸ்.எம்.நூர்தீன்...**
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# இசை அரசி ஜானகி ஏழு வருடங்களாக பாடாமலிருப்பது ஏன்?

பாடகி ஜானகி கடந்த ஏழு வருடங்களாக பாடாமல் இருக்கும் காரணம் என்ன என்பது குறித்து பேட்டி ஒன்றில் பேசி இருக்கிறார். இவர் சொன்ன காரணத்தை கேட்டு ரசிகர்கள் அவரை பாராட்டி வருகிறார்கள்.

பாடகி ஜானகி தமிழ் மட்டுமல்லாமல் தெலுங்கு, மலையாளம், கன்னடம் என பல 17 மொழிகளில் 48 ஆயிரம் பாடல்களை பாடி தன்னுடைய மயக்கும் குரலால் இலட்சக்கணக்கான ரசிகர்களை ஈர்த்து இருக்கிறார். தெலுங்கு பிராமண குடும்பத்தில் பிறந்த ஜானகி குழந்தையாக இருக்கும்போதே பாடத்தொடகி விட்டார். அதனாலேயே முறையான இசைப் பயிற்சியை பெற்றிருக்கிறார்.

சென்னைக்கு இவருடைய குடும்பம் இடம்பெயர்ந்த பிறகு ஏ.வி.எம் ஸ்டுடியோவில் இணைந்து திரைப்படத்துறையில் பாடல் பாட தொடங்கி இருக்கிறார். அதிலும் 1957ஆம் ஆண்டில் வெளிவந்த 'விதியின் விளையாட்டு' என்ற படத்தில் இடம்பெற்ற "பெண் என் ஆசை பாழானது ஏனோ" என்ற பாடல் தான் ஜானகியின் முதல் பாடலாக இருந்திருக்கிறது. இந்தப் பாடல் பாடிய அடுத்த நாளே இவருக்கு தெலுங்கு படத்தில் பாடும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதைத் தொடர்ந்து பல மொழிகளில் இவர் பாடி கொண்டிருந்தாலும் 25 ஆண்டுகளில் குழந்தையாகவும், குமரியாகவும், வயதானவர்களின் குரலிலும் பாடி பலரையும் வியக்க வைத்திருக்கிறார்.

ஒரு சிலருடைய பாடல்கள் எந்த நேரத்தில் கேட்டாலும் ரசிகர்களின் சோகங்கள் கரைந்து ஓடும். அந்த வரிசையில் ஜானகியின் பாடல்கள் கண்டிப்பாக இடம்பிடித்திருக்கும். சந்தோஷம் என்றாலும் சரி துக்கம் என்றாலும் சரி இவருடைய பாடல்களை கேட்பவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள்



ஜானகியின் பாடல்களில் 'சிங்காரவேலனே தேவா' பாடல் பெரிய அளவில் ஹிட் அடித்தது. இந்த பாடலை தொடர்ந்து ஏராளமாக இவருக்கு பாடல் வாய்ப்பு குவிந்தது. இளையராஜாவின் இசையில் எண்ணற்ற பாடல்களை ஜானகி பாடியிருக்கிறார். இளையராஜா, எம். எஸ். வி, ஏ. ஆர். ரகுமான், அனிருத் என்று அன்று தொடங்கி இன்றைய தலைமுறை இசையமைப்பாளர் வரை பாடி இருக்கிறார்.

அது மட்டுமல்லாமல் பாடகி ஜானகி இந்தியாவின் நைட்டிங்கேல் என்றும் அழைக்கப்படுகிறார்.

வசீகர குரலின் மூலம் மாயாஜாலம் செய்த இவர் 4 முறை தேசிய விருதும் பெற்றிருக்கிறார். அதிலும் இரண்டு தமிழ் பாடல்களுக்கும், ஒரு மலையாளம் மற்றும் ஒரு தெலுங்கு பாடல் என நான்கு முறை விருது பெற்று இருக்கிறார். அதுபோல தமிழக அரசு இவருக்கு கலைமாமணி விருது வழங்கி கௌரவித்தது. இப்படி பல விருதுகளையும் பெற்ற ஜானகி 2016 ஆம் ஆண்டு தான் திரை உலகில் இருந்து விலகுவதாக அறிவித்து ஹைதராபாத்தில் தன்னுடைய மகன் குடும்பத்தோடு வாழ்ந்து வருகிறார்.

இந்த நிலையில் தான் எதற்காக சினிமாவை விட்டு விலகப் போகிறேன் என்று அவர் பேசிய வீடியோ இப்போது இணையத்தில் அதிகமாக பகிரப்பட்டு வருகிறது. அதில் எனக்கு திறமை இருக்கிறது. வாய்ப்பு கிடைக்கிறது என்பதற்காக நான் மட்டுமே பாடி புகழையும், பணத்தையும் சம்பாதித்துக் கொண்டே இருப்பதில் எந்த நியாயமும் இல்லை.

வருங்கால சந்ததியினருக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும். யாரும் என்னை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ குறை சொல்வதற்கு முன்பு என் வருங்கால தலைமுறை புகழ்பெற வேண்டும் என்பதற்காக இசை துறையில் இருந்து ஓய்வு பெற்றுக் கொண்டேன் என்று பாடகி ஜானகி தெரிவித்துள்ளார். பாடகி ஜானகி கடைசியாக நடிகர் தனுஷ் நடிப்பில் வெளியான 'வேலையில்லா பட்டதாரி' படத்தில் இடம்பெற்ற 'அம்மா' பாடலை தான் பாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கேரளாவை மிரட்டும் நைல் காய்ச்சல்!

கேரளாவை மிரட்டும் நைல் காய்ச்சலுக்கு ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இதனால் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்க சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது. கேரள மாநிலம் கோழிக்கோடு, மலப்புரம் மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக காய்ச்சல் பரவி வருகிறது.

கோழிக்கோடு மாவட்டத்தில் 4 பேரும், மலப்புரம் மாவட்டத்தில் 6 பேரும் என மொத்தம் 10 பேர் காய்ச்சலால் கடுமையாக பாதிக்கப்பட்டனர். பின்னர், 9 பேர் கோழிக்கோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். இருப்பினும், காய்ச்சல் குணமாகவில்லை. கோழிக்கோடு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ஒருவரின் உடல்நிலை மோசமானது. இதையடுத்து 10 பேரின் மாதிரி சேகரிக்கப்பட்டு, எந்த வகை காய்ச்சல் என்பதை கண்டறிய கோழிக்கோடு அரசு மருத்துவக்கல்லூரி நுண்ணுயிர் பிரிவு ஆய்வு மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதன் முடிவில் 10 பேருக்கு 'நைல் காய்ச்சல்' பாதிப்பு உள்ளது தெரியவந்துள்ளது. மேலும் அவர்களிடம் இருந்து சேகரித்த மாதிரி பரிசோதனைக்காக புனேயில் உள்ள வைரலாஜி ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதில் நைல் காய்ச்சல்' பாதித்தது உறுதி செய்யப்பட்டது.

இது குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறும்போது, இந்த காய்ச்சல் பாதித்தவர்களுக்கு கடுமையான காய்ச்சல், தலைவலி, வலிப்பு, கை, கால் தளர்ச்சி போன்ற அறிகுறிகள் ஏற்படும். இந்த வகை காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிலருக்கு மூளைச்சாவு ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதைத்தொடர்ந்து காய்ச்சல் பாதித்தவர்களுக்கு மூளை பாதிப்பு ஏற்படாமல் இருக்க கோழிக்கோடு அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், 79 வயது முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். இதையடுத்து கேரள மாநில அரசு மற்றும் சுகாதாரத்துறை பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.



தீவிர தடுப்பு நடவடிக்கையாக மாநில அரசு நுளம்பு விசிறும் பணிகளை துரிதப்படுத்தி உள்ளது. குறிப்பாக மலப்புரம், கோழிக்கோடு ஆகிய பகுதிகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. கேரளாவில் மிரட்டும் வகையில் வேகமாக பரவும் வெஸ்ட் நைல் காய்ச்சலில் 100 இல் 80 பேருக்கு அறிகுறி தெரியாது. கியூலெக்ஸ் வகை நுளம்புகளால் இந்நோய் பரவுகிறது.

# இரண்டாம் உலகப்போர் வெற்றியில் மறைக்கப்பட்ட வீரன் மார்ஷல் சூக்கோ!



இவ்வாரம் உலகின் பல பாகங்களில் 'வெற்றித் தினம்' Victory in Europe Day கொண்டாடப்பட்டு வருகிறது. இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனி தோல்விய டைந்து, சரணடைந்த வெற்றியை பறைசாற்றும் நாள் இதுவாகும்.

இரண்டாம் உலகப் போரின் இறுதியில் ஜெர்மனி தோல்வியடைந்து, சரணடைந்த செய்தி பரவி அமெரிக்காவிலும், மேற்கு ஐரோப் பாவிலும் 1945 மே 8 ஆம் திகதி கொண்டாட் டங்கள் தொடங்கின. ஒவ்வொரு ஆண்டும் இந்த நாள் 'வெற்றித் தினம்' (VE Day Victory in Europe Day) என்று தற்போது கொண்டாடப்படு கிறது. சோவியத் ரஷ்யாவிலும் , கிழக்கு ஐரோப் பிய நாடுகளிலும் மே 9 ஆம் திகதி வெற்றித்தி னம் என்று பாரியளவில் கொண்டாடப்படுகிறது.

மேற்கும் கிழக்குமாக, ஏன் முழு உலக நாடு களுமே ஓரணி திரண்டு போராடியே இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியை தோல்வியடையச் செய்தன. ஆனால் இந்த வரலாற்று உண்மை களை மழுங்கடித்து மேற்கத்திய ஊடகங்கள் ஒரு பக்கச் சார்பாக வரலாற்றை திரிபுபடைத்து வெளி யிடுகின்றன.

## மேற்கத்தேய ஊடகங்களால் மழுங்கடிக்கப்பட்ட உண்மை!

2020 ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப் போர் மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் கூட்டு நினைவ கம் மீதான போர்வெற்றி தினத்தின் 75ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் வெளி யிடப்பட்ட வோஷிங்டனின் அறிக்கையில், நாஜி ஜெர்மனியை வென்றவர்கள் அமெரிக்காவும் பிரிட்டனுமே என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளமை பாரிய வரலாற்று திரிபும் பொய்மையுமாகும்.

இதற்கு ரஷ்யா கண்டனம் தெரிவிக்கை யில், மறுக்கமுடியாத பாத்திரத்திற்கு மரியாதை செலுத்தும் தைரியமோ விருப்பமோ அமெரிக்க அரசுக்கு இல்லை.

இரண்டாம் உலகப் போரில் சோவியத் ரஷ் யாவின் தியாகத்தையும் பங் களிப்பையும் மேற்குலக ஊட கங்கள்(Western Media), குறிப்பாக அமெரிக்கா சார்பு ஊடகங்கள் எப்போதும் மறைத்தோ அல்லது குறைத்தே மதிப்பிட்டு வரு கின்றன.





கோரமான நாஸி ஜெர்மனியை தோற்கடித்த தில் 27 மில்லியன் சோவியத் உயிர்களின் உன் னதத்தை மதிப்பை கௌரவிக்காமல் தவறான வரலாற்றையே இந்த ஊடகங்கள் வெளிப்படுத் துகின்றன.

நாஸி ஜெர்மனியை தோற்கடித்த இரண்டாம் உலகப் போரில் அமெரிக்காவும், பிரிட்டனுமே ஜேர்மனியை தோற்கடித்த வெற்றியாளர்களாக இந்த ஊடகங்கள் காலங்காலமாக குறிப்பிட்டு வருகின்றன.

ஏன், கீழைத்தேச ஆசிய நாடுகளிலும் இந்த ஆங்கிலேய வரலாற்றையே கண்மூடிக் கொண்டு வரலாற்றுப் புரிதலின்றி போதிக்கின்றனர். இரண்டாம் உலகப் போரில் சோவியத் யூனியன் செய்த பங்களிப்பை அமெரிக்கா தரப்பு ஊடகங் கள் வேண்டுமென்றே அங்கீகரிக்கமல், வரலாற் றைத் திரிபுபடுத்தி வெளியிடுகின்றன.

### வீரமிகு மார்ஷல் சூக்கோவ் :

பெர்லின் மீதான இறுதித் தாக்குத லுக்கு தலைமை தாங்கி, ஹிட்லரின் இராணுவ தலைமையகமான ரெய்க்ஸ் டாக்கில் (Reichstag) வெற்றிச் செங்கொ டியை ஏற்றிய ரஷ்ய மார்ஷல் சூக்கோவ் (Marshal Zhukov) பற்றி இன்றைய வர லாற்று நூல்களில் சிறிதளவும் கூறப்படு வதில்லை.

அத்துடன் சோவியத் துருப்புகள் 1945 ஏப்ரலின் இறுதியில் புயலெ னப் புகுந்து பெர்லினைக் கைப்பற்றிய வீரமிகு வரலாற்றை விட, ஆங்கில அமெ ரிக்கர்களின் நோர்மண்டி (Normandy) தறையிறங்கியதையே பாரிய வெற்றி யாக இந்த ஊடகங்கள் மிகைப்படுத்துவ தையும் காணலாம்.

ஐரோப்பாவின் வெற்றிச் செய்தி ஏற்பட மூலகர்த்தா சோவியத் யூனிய னின் மார்ஷல் கிரகோரி சூக்கோவ் ஆவார். இரண்டாம் உலகப் போரின் முடிவாக இத்தாலியில் 29 ஏப்ரல் அன்று நாஸிப் படைகள் சரணடை யவும், இதன்பின் 30 ஏப்ரல் அன்று நாஸி தலைமையகம் 'ரெய்க்ஸ்டாக்' சோவியத் படைகளால் கைப்பற்றப் பட்டவும் அவரின் நேரடிப் பங்களிப்பு அளப்பரியது.

மறைக்கப்பட்ட மார்ஷல் சூக்கோ வின் வீரமிகு வெற்றிகரமான வரலாற் றுத் தகவல்கள் இன்றைய ஆங்கிலேய நூல்களில் இல்லை என்பது வருத்தத் திற்குரியது.

சோவியத் யூனியனின் பிரபல்யமான மார்ஷல் சூக்கோவ் (டிசம்பர் 1, 1896ஜூன் 18, 1974) ஜப்பானிய ஆக்கிரமிப்பை நிறுத்த, அன்றைய ரஷ்யத் தலைவர் ஜோசப் ஸ்டாலினின் செம்ப டையில் 1938முதல் மங்கோலியமஞ்சூரிய எல் லையில் ஜப்பானிய ஆக்கிரமிப்பை நிறுத்தும் பணியில் வெற்றி பெற்றார். சூக்கோவ் சோவி யத்தை காப்பாற்ற தொடர்ந்து போரிட்டு காசன் ஏரி போரில் வெற்றி பெற்றார்.


நாஸிகளின் ஜேர்மன் படைகளுக்கு எதிராக மொஸ்கோ, ஸ்டாலின்கிராட் மற்றும் லெனின்கி ராட் ஆகியவற்றின் வெற்றிகரமான தாக்குதல்க ளுக்கு பொறுப்பேற்ற மார்ஷல் சூக்கோவ், இறு தியில் ஜெர்மனி பெர்லினில் வெற்றிகரமான செங்கொடியை ஏற்றினார்.

போருக்கு பின்னர் மொஸ்கோவில் மார்ஷல் சூக்கோவ் பல்வேறு இராணுவ பணிகளை மேற்கொண்டார். குருசேவ் ஆட்சிக்கு வந்த பிறகு, அவர் துணை அமைச்சராகி பின்னர் பாது காப்பு அமைச்சகத்திற்கு தலைமை தாங்கினார்.

மார்ஷல் சூக்கோவ் போருக்குப் பிறகும் ரஷ்ய மக்களுக்கு மிகவும் பிரபல்யமாக இருந்தார். 1939, 1944, 1945 மற்றும் 1956 ஆகிய ஆண்டுகளில் அவருக்கு சோவியத் யூனியனின் நாயகன் (Soviet Hero Award) விருது நான்கு முறை வழங்கப்பட்டது. மேலும் ஓர்டர் ஓஃப் விக்டரி (இரண்டு முறை) மற்றும் ஓர்டர் ஓஃப் லெனின் உட்பட பல சோவியத் விருதுகளைப் பெற்றார்.

அத்துடன் கிராண்ட் கிராஸ் ஓஃப் தி லெஜியன் டி'ஹானூர் (பிரான்ஸ், 1945) மற்றும் தலைமை தளபதி, லெஜியன் ஓஃப் மெரிட் (யு. எஸ்., 1945) உட்பட பல வெளிநாட்டு விருதுக ளையும் பெற்றார். அத்துடன் 1969 இல் அவர் தனது சுயசரிதையான "மார்ஷல் ஓஃப் விக்டரி" எனும் நூலை வெளியிட்டு உலகம் போற்றிய வீர னாவார்.

ஓர் வரலாற்று நாயகனின் உண்மையான அர்ப்பணிப்பையும், தியாகத்தையும் புறக்க ணித்து திரிபுபடுத்தப்பட்ட மேற்குலக ஊடகங்களின் செயலானது, எதிர்கால சந்ததியினருக்கு அப்பட்டமான பொய்களையே வரலாறு என போதிப்பது கவலைக்குரியதாகும், கண்டனத்துக்குரியதாகும்.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# நியூசிலாந்து உணவு விருந்துவிழாவில் விஷேட அதிதியாக முஷாரப் எம்.பி

*நியூசிலாந்து ஆக்லாந்தின் Favona வில் உள்ள Samoan Church Hall இல் கடந்த வாரம் கறி விருந்து விழா கோலாகல மாக இடம்பெற்றது.*

*அரசன் NZ அறக்கட்டளையுடன் இணைந்து TANZI தமிழ்க் குழுமம் ஏற்பாடு செய்த இந்த விழாவில், தமிழ்நாட்டின் மாறுபட்ட மற்றும் சுவையான பல உணவு வகைகள் பரிமாறப் பட்டன.*

*காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்ற இந்த நிகழ்ச் சியில் 1800 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். சௌந்திரரா ஜன் பழனிசாமி, டொக்டர் லக்ஷ்ம ணன் செல்வநேசன், கிஷோர் குமார் குமாரசாமி, டொக்டர் மகேஷ் பாபு உட்பட மற்றும் பலர் தலைமையில் சுமார் 100 தன்னார்வலர்கள் இந்த மெகா நிகழ்வை நடத்துவதற்கு கடு மையாக உழைத்தனர்.*

*அங்கே தன்னார்வலர்களால் தயா ரிக்கப்பட்ட நாற்பது வகை உணவு கள், சைவம் மற்றும் அசைவப் பிரிவு களின் கீழ் பரிமாறப்பட்டன.*






*பல்வேறு பொழுதுபோக்கு பாரம் பரிய மற்றும் நவீன இசை மற்றும் நடனம் ஆகியவை நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக இருந்தது.*

*குறித்த நிகழ்வில் இலங்கை யின் பாராளுமன்ற உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் சட்டத்தரணியுமான S.M.M. முஷாரப் விஷேட அதிதி யாக கலந்து கொண்டதோடு நியூசி லாந்தின் இன சமூகங்கள் அமைச் சர் Melissa Lee MP (தேசிய கட்சி), சுங்க மற்றும் மூத்த அமைச்சர் Casey Costello (NZ First), Jenny Salesa MP,*



*Dr Deborah Russell, Shanan Halbert, Lemauga Sosene, Ingrid Leary (தொழிலாளர் கட்சி), Dr. Parmjeet Parmar (ACT) ஆகியோர் மற்றும் Greg Fleming, Cameron Brewer (தேசிய கட்சி) முக்கி யஸ்தர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது.*

# சுற்றுலா வருமானம் வீழ்ச்சியடைந்ததால் இந்தியாவிடம் உதவி கோரும் மாலைதீவு!



இந்தியாவுடன் சில காலமாக முரண்பாடான நிலைப்பாடு கொண்டிருந்த மாலைதீவு தற்போது இந்தி யாவிடம் சரணாகதி அடைந்தது போன்று நடந்து கொள்ளத் தொடங்கியுள்ளது.

இந்தியாவுடன் மாலைதீவு பகைமை பாராட்டியதையடுத்து இந்திய சுற்றுலாப் பயணிகள் மாலைதீவுக்குச் செல்வதை பெருமளவில் தவிர்த்துக் கொண்டனர். இதனால் மாலைதீவுக்கு சுற்றுலா வருமா னம் பெருமளவில் வீழ்ச்சியடைந்தது.

தனது நாட்டுப் பொருளாதாரம் வீழ்ச்சிய டைந்ததை உணர்ந்து கொண்ட மாலைதீவு வேறு வழியின்றி இந்தியாவுடன் தற்போது நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடித்து வரு கின்றது.

"இந்திய மக்கள் தயவு செய்து மாலை தீவுக்கு சுற்றுலா வர வேண்டும்" என அந் நாட்டு சுற்றுலாத்துறை அமைச்சர் இப்ரா ஹிம் பைசல் இப்போது கூறியுள்ளார்.

மாலைதீவு ஜனாதிபதியாக முஹமது முயிசு பதவியேற்றதில் இருந்து இந்தியா வுடனான அந்நாட்டு உறவில் விரிசல் ஏற் பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் அந்நாட்டு அமைச்சர்கள் 3 பேர் இந்தியா குறித்தும், பிரதமர் நரேந்திர மோடி குறித்தும் அவ தூறான கருத்துத் தெரிவித்தனர். இது விரிசலை மேலும் அதிகப்படுத்தியதுடன், மாலைதீவுக்கு சுற்றுலா செல்வதை இந் தியர்கள் பெரும்பாலானோர் தற்போது தவிர்த்து வருகின்றனர். இதனால், சுற் றுலாவையே பெரிதும் நம்பியுள்ள மாலைதீவு நாட்டின் பொருளாதாரத்தில் சிக்கலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், மாலைதீவு சுற்றுலாத் துறை அமைச்சர் இப்ராஹிம் பைசல் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் "மாலைதீவுக்கு வரலாறு உள்ளது. எங்கள் புதிய அரசு, இந்தியாவுடன் இணைந்து செயற்பட விரும்புகிறது. அமைதி மற்றும் நட்புறவுடன் கூடிய சூழ்நிலையை ஏற்ப டுத்த விரும்புகிறோம். எங்கள் நாட்டிற்கு வரும் இந்தியர்களை எங்கள் மக்களும், அரசும் வரவேற்பார்கள். சுற்றுலாத்துறை அமைச்சர் என்ற முறையில், தயவு செய்து மாலைதீவின் சுற்றுலாவில் இந்தியர்க ளும் ஒரு அங்கமாக இருக்க வேண்டும். எங்களது பொருளாதாரம் சுற்றுலாவை நம்பியே உள்ளது" என்று கூறினார்.



## இந்திய சுற்றுலாப் பயணிகளின் வருகை 42 வீதமாக குறைந்தது!

இந்திய சுற்றுலாப் பயணிகள் மாலை தீவைப் புறக்கணிப்பதன் காரணமாக மாலைதீவின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வரு கின்றன. இருதரப்பு உறவு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால், மாலைதீவுக்குச் செல்லும் இந்தியச் சுற்றுலாப் பயணிக ளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து கொண்டே செல்கின்றது. இதனால் சுற்று லாவையே பிரதானமாக நம்பியிருக்கும் மாலைதீவு நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியாவுடன் தங்கள் நாடு நீண்ட உறவைக் கொண்டிருப்பதாக செய்தி நிறுவனமொன்றுக்குப் பேட்டி அளித்துள்ள மாலைதீவு சுற்றுலாத்துறை அமைச்சர் இப்ராஹிம் பைசல் குறிப்பிட் டுள்ளார்.

"இரு நாடுகளுக்கும் இடையே ஒரு வரலாற்றுப் பிணைப்பு இருக் கிறது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட இந்த அரசு இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற விரும்புகி றது. நாங்கள் எப்போதும் அமைதி மற்றும் நட்புச் சூழலையே மேம் படுத்த விரும்புகிறோம். இந்தியர் கள் தயவு செய்து மாலைதீவு நாட் டிற்குச் சுற்றுலாவுக்கு வாருங்கள். மாலைதீவு சுற்றுலாத் துறை அமைச் சரான எனது கோரிக்கை இதுதான்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மாலைதீவு நாட்டின் விரிசல் போக்கைய டுத்து, பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஜன வரியில் லட்சத்தீவுக்குச் சென்றார். அங்கு எடுத்துக் கொண்ட படங்களை டிவிட்டர் பக்கத்தில் பகிர்ந்து இருந்தார். அப்போது மாலைதீவு ஜனாதிபதி முய்சுவின் அமைச் சரவையில் இருந்த சில அமைச்சர்கள் இந்தியப் பிரதமர் மோடி குறித்து மிக மோசமான கருத்துகளைத் தெரிவித்த னர். இது சமூக வலைத்தளங்களில் மிகப் பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து பிரபலங்கள் உள்ளிட்ட பல ஆயிரம் இந்தியர்கள் தங்களது மாலைதீவு பயணத்தை ரத்து செய்தனர். மாலைதீவுக்குச் செல்லும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பட்டியலில் முதல் இடத்தில் இருந்த இந்தியா தற்போது 6 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங் களில் இந்தியாவில் இருந்து மாலைதீ வுக்குச் சென்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 42 சதவீதம் குறைந் துள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் இந்தியாவில் இருந்து 73,785 சுற்றுலாப் பயணிகள் மாலைதீவு சென்றிருந்தனர். ஆனால், இந்தாண்டு அதே காலகட்டத்தில் வெறும் 42,638 சுற்றுலாப் பயணிகள் மட்டுமே சென்றுள்ளனர். இந்தாண்டு மே 4 ஆம் திகதி வரை 43,991 இந்தியர்கள் மட்டுமே மாலத்தீவுக்குச் சுற்றுலா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு நவம்பரில் ஜனாதிபதி முகமது முய்சு தலைமையிலான புதிய அரசு பதவியேற்ற பிறகு, இந்தியாவுக்கும் மாலைதீவுக்கும் இடையிலான உறவில் ஏற்பட்ட விரிசலே இந்தியச் சுற்றுலாப் பய ணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்ப டக் காரணமாக இருக்கிறது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் நடை பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சீன ஆதரவு நிலைப்பாடு கொண்ட முய்சு வென்றார். அதன் பிறகு அவர் தொடர்ச்சியாக இந்தி யாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங் கினார்.

மாலைதீவில் உள்ள நோயாளிகளுக்கு உதவுவதற்காக இந்தியா ஹெலிகொப் டரை கொடுத்திருந்தது. அதை இயக் குவதற்கும் பராமரிக்கவுமென இந்திய இராணுவத்தினர் அங்கு இருந்தனர். இருப் பினும், அவர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று முய்சு கூறி யிருந்தமை குறிப்பிடத்தக்கது. அந்த அறி விப்பையடுத்தே இருநாடுகளுக்குமிடை யில் முரண்பாடு உருவெடுத்தது.

இதுஇவ்விதமிருக்க, மாலைதீவில் நிலைகொண்டிருந்த 51 இந்தியப் படை வீரர்களும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக மாலைதீவு அரசாங்கம் அறிவித்திருக்கி றது.

இந்திய ஜனாதிபதி அலுவலகத்தின் பிரதான பேச்சாளர், மாலைதீவில் தங்கியி ருந்த குறித்த படையினர் இந்தியா திரும்பி யுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளார்.

இருப்பினும், மாலைதீவில் நிலை கொண்டிருக்கும் இந்திய வீரர்களின் சரியான எண்ணிக்கை இன்னும் வெளி யிடப்படவில்லை. அதேவேளை, மாலைதீ வில் உள்ள டோர்னியர் விமானம் மற்றும் ஹெலிகொப்டர்களை நிர்வகிப்பதற்கு இந் தியாவிலிருந்து சிவிலியன் நிபுணர்களை பணியமர்த்துவதற்காக இரண்டு நாடுக ளும் இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

# கல்வி நிறுவன பட்டமளிப்பு விழா




கிழக்கிலங்கையின் முன்னணி தனியார் கல்வி நிறுவனங்களில் ஒன்றாக திகழும், அக்கரைப்பற்றில் இயங்கி வரும் IPHS Campus கல்வி நிறுவனத்தின் முதலாவது வரு டாந்த பட்டமளிப்பு நிகழ்வானது, கொழும்பு பண்டா ரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்ட பத்தில் அண்மையில் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பொறியியலாளர் என்.ரீ.ஹமீட் அலி தலைமையில் நடைபெற்றது.

இப்பட்டமளிப்பு விழாவில் உயர்டிப்ளோமா மற்றும் டிப்ளோமா ஆகிய பாடநெறிகளை பூர்த்தி செய்த நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் சான் றிதழ்களை பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னாள் பிரதான அதிகாரியும், கொழும்பு பல் கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும், பிரான்ஸ் நாட்டிற்கான முன்னாள் தூதுவருமான பேராசிரியர் சானிக்கா ஹிம்புராகமவும், விசேட அதிதிகளாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்க ழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி உமர் லெப்பை செய்னுடீன், உம்மு தர்தா அரபிக் கல்லூ ரியின் அதிபர் கலாநிதி எம்.ஐ.சித்தீக் (அஸ்ஹரி), நிறுவனத்தின் முகாமையாளர், நிர்வாக உத்தியோ கத்தர்கள், விரிவுரையாளர்கள் கல்வியியலாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

**எம்.எஸ்.எம்.றிஸ்வான்...**
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

ஜனாதிபதித் தேர்தலில்

# ஒரு கோடியே 70 இலட்சம் பேரளவில் வாக்களிக்க தகுதி




2024ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தலில் சுமார் ஒரு கோடியே எழுபது இலட்சம் பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இத்தொகையில் 18 வயதை பூர்த்தி செய்த 10 இலட்சம் புதிய வாக்காளர்கள் உள்ளடங்குவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான அடிப்படை ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளதாகவும் ஜனாதிபதித் தேர்தலுக்கு 1,000 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்துக்கான வாக்காளர் பதிவேடுகள் தயாரிப்பது தொடர்பான நடவடிக்கைகளை நேற்று முன்தினம் (09) ஆரம்பித்துள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது. வாக்காளர் பதிவேடு தயாரிக்கும் நடவடிக்கைகள் நேற்றுடன் நிறைவடைவதாகவும் தேர்தல் செயலகம் குறிப்பிட்டுள்ளது. இதன்படி வாக்களிக்க தகுதியிருந்தும் வாக்காளர் பதிவேட்டில் பெயர் சேர்க்கப்படாத நபர்கள், தங்களின் பெயர்களை உரிய பட்டியலில் சேர்க்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டொனால்ட் லூ...

இலங்கைக்கு மேலதிகமாக, அவர் தனது ஆசிய சுற்றுப்பயணத்தில் இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்நிலையில் சுற்றுப்பயணத்தை ஆரம்பித்த அவர் நேற்று (10) இந்தியா சென்றடைந்ததாகவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவரது ஆசியப் பயணம் ஆசிய நாடுகளிடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதுடன், சுதந்திரமான, திறந்த மற்றும் வளமான இந்தோபசிபிக் பிராந்தியத்திற்கான அமெரிக்க ஆதரவை நிரூபிக்கும். இந்தியாவின் சென்னையில், தென்னிந்தியாவில் இருதரப்பு ஈடுபாட்டை வலுப்படுத்துவதற்காக துணை செயலாளர் தூதரக அதிகாரிகளையும் இவர் சந்திப்பார். பிற குழுக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். தனது இந்திய விஜயத்தின் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்யும் இவர், இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு அமெரிக்காவின் ஆதரவை உறுதிப்படுத்துவதுடன், சுதந்திரமான மற்றும் ஜனநாயக சமூகத்தின் அடித்தளமான வலுவான சிவில் சமூகத்தின் முக்கியத்துவத்தையும் உறுதிப்படுத்துவார். இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு அவர் பங்காளதேஷ் செல்ல உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீடமைப்பு மற்றும் சர்வதேச...

'இலங்கையைக் கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் இவ்வருட கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது டன், நிர்மாணத்துறை நிறுவனங்களின் 300 விற்பனை கூடங்கள் இந்தக் கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ளன. சீனாவில் உள்ள 30 முக்கிய நிறுவனங்களின் தயாரிப்புகளுடன் கூடிய விற்பனை கூடங்கள் இந்த கண்காட்சியில் முதல் முறையாக இணைந்துள்ளதுடன், இலங்கை முப்படைகளின் நிர்மாணத் தொழில்நுட்பத்தைக் காட்சிப்படுத்தும் கூடங்களை உள்ளடக்கிய இக்கண்காட்சி, எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## இன்றைய பலன்கள்

(11.05.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயல்பட வேண்டும். வேலைகளில் ஏற்பட்ட தவறுக்காக உயரதிகாரியின் கோபத்திற்கு ஆளாக நேரிடும்.

**ரிஷபம் :** பயணங்களை தவிர்க்கவும். தகுந்த நண்பர்களின் உதவியுடன் செயல்களில் வெற்றி காண்பீர்கள். பண வரவு தாமதமாகும்.

**மிதுனம்:** ஜாமீன் கையெழுத்து இடுவதை தவிர்க்கவும். உத்தியோகத்தர்கள் சிலருக்கு உயர் அதிகாரிகளின் விருப்பப்படி முக்கிய நபரின் வேலையை உடனடியாக செய்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

**கடகம்:** கொடுக்கல் வாங்கல்களில் நிதானத்தை கடைப்பிடியுங்கள். உத்தியோகத்தில் சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

**சிம்மம்:** உங்களுக்கு வரவேண்டிய தொகை நினைத்தபடி குறித்த நேரத்தில் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு பொறுப்புகள் அதிகரிக்கும்.

**கன்னி:** உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்க வாய்ப்பு உண்டு. சக பணியாளர்களின் வேலைகளையும் சேர்த்து செய்யும் நிலை ஏற்படலாம்.

**துலாம்:** செய்யும் காரியங்களில் அதிக முயற்சியுடன் ஈடுபடும் போது முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தர்கள் சிலர் தங்கள் வேலையை விட்டு அதிக ஆதாயம் உள்ள வேலைக்கு செல்ல முயற்சிப்பீர்கள்.

**விருச்சிகம்:** எதிலும் நிதானமான போக்கை கடைபிடிப்பது நல்லது. எளிதாக முடிக்கலாம் என்று கருதியை வேலையை அதிக முயற்சி மூலம் செய்து முடிப்பீர்கள்.

**தனுசு:** நண்பர்களின் ஒத்துழைப்பு இருந்தாலும் எடுக்கும் முயற்சிகளில் தாமதங்களை தவிர்க்க இயலாது. உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு அலுவலக பணி நிமித்தம் வெளியூர் செல்லும் நிலை ஏற்படலாம்.

**மகரம்:** முக்கிய வேலைகளில் தொய்வு ஏற்படக்கூடிய வாரம் இது.நண்பர்கள் உங்கள் கண்களில் படாமல் போகலாம். உத்தியோகத்தர்கள் அவசரப்பட்டு செய்த வேலையில் பிரச்சனையை சந்திக்கலாம்.

**கும்பம்:** நீங்கள் நல்ல முறையில் நடந்து கொண்டாலும் சச்சரவுகள் தேடி வரக்கூடும். நிறைவு பெறாத காரியங்களை செய்து முடிக்க தகுந்த நண்பர்களின் உதவியை நாடுவீர்கள்.

**மீனம்:** பல செயல்கள் உங்கள் விருப்பம் போல நடைபெறுவதால் மனதில் உற்சாகம் கூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு எதிர்பார்த்த கடன் தொகை கிடைத்து பாதையில் இருந்த பணியை தொடர்வீர்கள்.

## 03 பில். அமெ. டொலர்களை...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம,

முதலீடுகள் நாட்டுக்குள் வருவதற்கு, அரசியல் ஸ்திரத்தன்மை, நிதி ஸ்திரத்தன்மை மற்றும் நாட்டின் எதிர்காலம் குறித்த உறுதிப்பாடு இருக்க வேண்டும். அதற்கிணங்க, இந்நாட்டுக்கு முதலீடுகள் அதிகரித்து வருகின்றன. நாட்டில் முதலீட்டுச் சூழல் மேம்பட்டுள்ளது. 02 ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலையில் இருந்து, 200 சதவீதம் மாறியுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், முதலீட்டாளர்கள் நாட்டக்கு வரவில்லை. ஆனால் தற்போது முதலீட்டாளர்கள் வரத் தொடங்கிவிட்டனர் என்பதை புள்ளி விபரங்களுடன் என்னால் முன்வைக்க முடியும். மேலும் நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட இலக்குகளை தாண்டிச் செல்ல முடிந்துள்ளது. இவை அனைத்தும் ஜனாதிபதி தலைமையில் அரசாங்கம் முன்னெடுத்த வேலைத் திட்டங்களினால் இந்த இலக்கை அடைய முடிந்துள்ளது. இந்த வருடத்தின் முதல் காலாண்டில் மட்டும் நிதி அமைச்சின் இலக்கை நிறைவு செய்வது தொடர்பான நடவடிக்கைகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, 2024ஆம் ஆண்டு இறுதிக்குள், நிதி அமைச்சு எமக்கு வழங்கிய இலக்கை மூன்று மடங்காக அதிகரிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அதாவது இந்த வருடத்தில் 03 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான முதலீடுகளை இலங்கைக்கு கொண்டு வர முடியுமென நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றேன்.

2023ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட முதலீட்டு திட்டங்கள் இந்த வருடத்திலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அந்த முதலீடுகள் இந்த ஆண்டில் சேர்க்கப்படவில்லை. மேலும், இந்த ஆண்டு முதலீட்டு சபை பிரதிநிதிகளை நியமித்து வெளிநாடுகளில் முதலீடுகளை ஊக்குவிக்க ஆரம்பித்துள்ளன. வெளிநாடுகளிலுள்ள இலங்கை வர்த்தகர்களை உள்ளடக்கிய Global Forum ஊடாக முன்னெடுக்கப்படும் நிகழ்வுகளின் மூலம் பிரிட்டன், கனடா, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளிலிருந்து வெற்றிகரமான முடிவுகள் ஏற்கனவே கிடைத்துள்ளன என்பதை நான் கூற விரும்புகின்றேன்.

இதற்கு மேலதிகமாக, திருகோணமலை, மாங்குளம், பரந்தன், காங்கேசன்துறை பிரதேசங்களை அண்மித்த கைத்தொழில் பேட்டைகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதில் முதற்கட்டமாக காங்கேசன்துறையிலுள்ள தனியார் கைத்தொழில் பேட்டையில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கனடா வாழ் இலங்கையர்களை உள்ளடக்கிய பலம்வாய்ந்த குழு ஒன்று இந்த செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது. 500 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும், திருகோணமலை அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக, சூரிய, காற்றாலை வலுசக்தி, பசுமை ஹைட்ரஜன் ஆகிய துறைகள் நாட்டின் முக்கிய முதலீடுகளாக மாறும். இந்த நாட்டின் கடன் மறுசீரமைப்பு பணிகள் நிறைவடைந்த பிறகு, இந்தியாவுடன் இணைந்து இந்த அபிவிருத்தித் திட்டங்களை விரைவுபடுத்த எதிர்பார்க்கின்றோம்.

## 'DIGIECON உலகளாவிய'... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

கிடைக்கும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்தின் கீழ் நாட்டின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மை அடைந்து பணவீக்கம் குறைந்துள்ளது. இதன்படி, இந்நாட்டில் முதலீடுகளுக்கு சிறந்த பின்னணி உருவாகியுள்ளது. எனவே, இந்த மாநாட்டின் மூலம் பல வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கும். இது நாட்டின் பொருளாதாரத்தையும் பலப்படுத்தும்'' என்றும் தெரிவித்தார்.

தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் கலாநிதி தர்ம ஸ்ரீ குமாரதுங்க, MasterCard முகாமையாளர் (இலங்கை மற்றும் மாலைதீவு) சந்துன் ஹபுகொட, FITIS நிறுவனத் தலைவர் இந்திக்க டி சொய்சா, SLASSCOM நிறுவனத்தின் பிரதித் தலைவர் நிஷான் மெண்டிஸ், BCS நிறுவனத்தின் தலைவர் அலோன்சோ டோல் CSSL நிறுவனத்தின் தலைவர் கலாநிதி அஜந்த அத்துகோரள உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## 13ஆம், 14ஆம் திகதிகளில்...

இதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான இரண்டு ஒழுங்குவிதிகள், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள், நிதிச் சட்டத்தின் கீழான இரண்டு கட்டளைகள், அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழான நான்கு ஒழுங்குவிதிகள், ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான ஆறு தீர்மானங்கள், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான கட்டளை, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் என்பன விவாதத்தின் பின்னர் நிறைவேற்றப்படவிருப்பதுடன், ஜெயா கென்டெய்னர் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் (2022)ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை விவாதமின்றி நிறைவேற்றுவதற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பவித்ரா வன்னியாரச்சி சகுர்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம், சர்வதேச தேரவாத நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம், சவீர மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம், களனி பௌத்த பெண்கள் அறக்கட்டளை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் என்பன பரிசீலனைக்காக ஆற்றுப்படுத்தப்படவுள்ளன. பி.ப 5.00 மணி முதல் 5.30 மணி வரை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணைக்காக (அரசாங்கம்)நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2024 மே மாதம் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரை வாய்மூலவிடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டு வரப்படும் பலஸ்தீன விவகாரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

## கடவுச்சீட்டுகளை தயாரிக்கும்...

திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் நீர்கொழும்பு கொச்சிக்கடை பகுதியில் வசிக்கும் 38 வயது வர்த்தகர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். விமான பயணச்சீட்டு விற்பனை முகவர் நிலையத்தை நடத்தி வருவதுடன், துபாயிலிருந்து புடவை மற்றும், காலணிகளை கொண்டு வந்து நாட்டுக்குள் விற்பனை செய்யும் தொழிலிலும் ஈடுபட்டு வரும் வர்த்தகர் என்றும் தெரியவந்துளளது.

கைது செய்யப்பட்ட இந்த வர்த்தகர், சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த அனைத்து ஆவணங்களும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## போலி வாக்குறுதிகளுக்காக...

போராட்டத்தில் காயமடைந்தவர்கள் இன்னும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சொத்துக்கள் வாகனங்கள் என்பன சேதமாக்கப்பட்டன.

நாட்டில் ஆட்சிக் கவிழ்ப்பை முன்னெடுப்பதற்காக பலர் பேராட்டத்துக்கு வழிவகுத்தனர். சுயலாப தேவைக்காக ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்துகின்றனர்.

நாட்டு மக்கள் புத்திசாலிகள். எனவே போலி வாக்குறுதிகளை வழங்கி அரசியல் இலாபம் தேடுபவர்களிடம் ஏமாற மாட்டார்கள் என்ற நம்பிக்கை உள்ளது" என நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

## இரத்தினபுரி, தும்பறை...

தாக்குதலுக்குள்ளான ஒரு ஆண் தொழிலாளி மற்றும் ஒரு பெண் தொழிலாளி ஆகிய இரண்டு பேரும் பலத்த காயங்களோடு இரத்தினபுரி பொலிஸாரின் பாதுகாப்போடு இரத்தினபுரி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளனர்.

அதேவேளை தாக்குதல் நடத்திய தோட்ட அதிகாரிகளை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளதாக இ.தொ.கா.வின் தேசிய அமைப்பாளர் பி.சக்திவேல் மேலும் தெரிவித்தார்.

## கிறிப்டோ நாணய...

கிறிப்டோ நாணயங்களில் முதலீடு செய்த சிலர் நட்டமடைந்துள்ளதாகவும் இவ்வாறான முதலீடுகளின் மூலம் சிலர் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஒலிம்பிக் தீபத்தை...

ஒலிம்பிக் தீபத்தை ஏந்துவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பாரிஸ் நகரில் கடந்த வருடம் சிறந்த பாண் தயாரிப்பில் முதலிடம் பெற்ற யாழ்ப்பாணத்தை சேர்ந்த தர்ஷன் செல்வராஜாவுக்கும் இந்த ஒலிம்பிக் தீபத்தை ஏந்துவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## பரீட்சைகள் ஆணையாளர்...

கொழும்பிலுள்ள இரண்டு பரீட்சை நிலையங்களிலும் ஹசலக்க பிரதேசத்திலுள்ள ஒரு பரீட்சை நிலையத்திலும் இந்த முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. பரீட்சை எழுதியவர்கள் நேற்று முன்தினம் (09) வழங்கப்பட்ட ஆங்கில வினாத்தாளை கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தி படம் எடுத்து மற்ற தரப்பினருக்கு அனுப்பி வினாக்களுக்குரிய பதில்கள் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதன்போது பரீட்சை நிலையங்களில் இருந்த அதிகாரிகள் கையடக்கத் தொலைபேசிகளைக் கைப்பற்றியுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு வேலை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

உரிமையாளரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இங்கு கண்டெடுக்கப்பட்ட 02 கடவுச்சீட்டுகள் மற்றும் பல வெளிநாட்டு வேலைவாய்ப்பு விண்ணப்பங்களை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் குருநாகல் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவரெனவும், அவர் நேற்று முன்தினம் (09) கொழும்பு, அளுத்கடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

## தொழில் துறையில்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான போராட்டத்தை, நாம் முன்னெடுத்துள்ளோம்.

இரவிலும் எங்கும் பெண்கள் பயணிக்க கூடிய நிலைக்கு நாடு உருவாக்கப்பட்டுள்ள நிலையில், சில தொழிற்சங்க தலைவர்கள் பெண்கள் இரவு நேரம் தொழில் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இது வேடிக்கையானது. தொழில்நுட்பத் துறையில் பணிபுரியும் பெண்களுக்கு இது பெரும் வாய்ப்பாக அமையும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## தேயிலை தோட்டங்களுக்கும்...

தேயிலை உற்பத்தியாளர்கள் சங்கம், இலங்கை தேயிலைச் சபையின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

இதுவரை 10 ஏக்கருக்கு மாத்திரமே உர மானியம் வழங்கப்பட்டு வந்துள்ளது. எதிர்வரும் காலங்களில் அதனை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## டயனா தாக்கல் செய்த...

முன்னிலையில் இந்த மனு நேற்று கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

டயனா கமகே சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா மன்றில் விடயங்களை முன்வைத்ததுடன் , இந்த மனு தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள தீர்மானத்தை அறிவிப்பதற்கு திகதியை குறிப்பிடுமாறு கேட்டுக்கொண்டார்.

இதற்கமைவாக மனுவை இம்மாதம் 28ஆம் திகதி எடுத்துக்கொள்ளுமாறு உத்தரவிட்ட நீதியரசர்கள் குழாம், அன்றையதினம் மனுவை தொடர்ந்து முன்னெடுப்பது தொடர்பில் தீர்மானம் அறிவிக்கப்படும் என்று மூவரடங்கிய நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் அமர்வு தெரிவித்தது.

## தேசிய சிறந்த வர்த்தக... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

முதல் தடவையாக இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையானது உற்பத்தித் துறையில் விசேட வர்த்தக நாம விருது வழங்கும் விழாவை நடத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் ஏற்பாடு செய்துள்ளதாக சபையின் தலைவர் கலாநிதி சாரங்க அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

"இவ்வகையில், சுமார் 25 கைத்தொழில் துறைகள் மற்றும் 125 துணைத் துறைகளை உள்ளடக்கிய இந்த வர்த்தக நாம சிறப்பு விருது விழாவை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.மேலும் இதற்காக சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவிலான தொழில்துறையினருக்கு இது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை கூறுகிறது.

தேசிய சிறந்த வர்த்தக நாமங்கள் விருது வழங்கும் விழாவை நடத்துகிறோம். மேலும் இம் மாத இறுதியில் விழாவை நடத்த உள்ளதாகவும் தெரிவித்தார். இது தொடர்பான மேலதிக தகவல்களை www.idb.gov.lk இணையத்தளத்துக்குச் சென்று பெற்றுக்கொள்ளலாம்.

## சிரேஷ்ட பிரஜைகளின்...

அறிவுறுத்தல்களை கருத்திற்கொண்டு சிரேஷ்ட பிரஜைகளின் வைப்பு வட்டி விகிதத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் அடங்கிய விரிவான அறிக்கையை மிக விரைவில் வழங்க நடவடிக்கை எடுப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். 60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு அவர்களின் வங்கி மற்றும் நிதி நிறுவன கணக்குகளுக்கு 15 சதவீதத்துக்கு விஞ்சாமல் ஆண்டு வட்டி விகிதம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது அந்த வட்டி வீதம் ஒற்றை இலக்க வீதமாக மாறிவிட்டது. இந்நிலைமையினால் வட்டி வருமானத்தில் வாழ்ந்து வரும் பல முதியோர் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் இது தொடர்பில் தனக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிரேஷ்ட பிரஜைகள் அவ்வப்போது அறிவித்துள்ளனர். இதனையடுத்து, இவ்விடயத்தை கவனமாகவும் அனுதாபத்துடனும் பரிசீலித்து மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு விரிவான அறிக்கை ஒன்றை வழங்குமாறு ஜனாதிபதி கேட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

## தமிழ் மக்களின் அபிலாஷைகளை...

தெரிவித்துள்ளார். தீவகத்தின் வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு மற்றும் காரைநகர் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய கட்சியின் பொறுப்பாளர்கள், வட்டார செயலாளர்கள், வட்டார நிர்வாக உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள், முக்கியஸ்தர்களுடனான சந்திப்பு நேற்று வேலணை துறையூர் முருகன் ஆலய பொது மண்டபத்தில் நடைபெற்றது.

## எந்த தரப்புடன்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஏகமனதான தீர்மானத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே அறிவிப்பார் என்றும் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று தேர்தல் நடவடிக்கைகளுக்கான அலுவலகத்தை திறந்து வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பின் மேலும் தெரிவித்த அவர்,

ஜனாதிபதி தேர்தலுக்கான நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.தேர்தலுக்கு நாம் தயாராக உள்ள போதும் சிறந்த வேட்பாளர் ஒருவர் இதுவரை கிடைக்கவில்லை. அந்த வகையில் எமது தரப்பில் தாமதம் இருப்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது பல விடயங்கள் பேசப்பட்டன. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற யோசனையை முன்வைத்துள்ளோம். இந்திய தேர்தலுக்கு பின்னர் ஜூன் 18 ஆம் திகதிக்குப் பின்னர் தனது நிலைப்பாட்டை அறிவிப்பதாக அவர் குறிப்பிட்டார். எவ்வாறெனினும் வெகுவிரைவில் உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்குமாறு ஜனாதிபதியிடம் நான் வலியுறுத்தியுள்ளேன்.

பொதுஜன பெரமுனவின் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவும்,கட்சியைப் பலப்படுத்தவும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

## முஜிபுர் ரஹ்மான்...

பிரமாணம் செய்துகொண்ட பின்னர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் (தேசியப் பட்டியல்) பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகேயின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி 2024ஆம் ஆண்டு மே மாதம் 08ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டதை தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அக்கட்சியின் (தேசியப் பட்டியல்) பாராளுமன்ற உறுப்பினராக முஜிபுர் ரஹ்மான் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்துக்கு கொழும்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்த முஜிபுர் ரஹ்மான் 2023 ஜனவரி 20ஆம் திகதி தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்திருந்தார்.

## இரத்தினபுரி, தும்பறை 82ஆம்...

அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் இரத்தினபுரி மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபருக்கு ஜனாதிபதியின் தொழிற்சங்க தொடர்புகளுக்கான ஆலோசகர் சமன் ரத்னப்பிரிய அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இத்தொழிலாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார், ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

இதனையடுத்து இரத்தினபுரி மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட சாகல ரத்நாயக்க, உடனடி நடவடிக்கைக்கு அறிவுறுத்தல் வழங்கியதுடன், இது தொடர்பில் அவசர கடிதமொன்றை அனுப்பி வைக்குமாறும் அறிக்கையொன்றை கோருமாறும் ஜனாதிபதியின் தொழிற்சங்க தொடர்புகளுக்கான ஆலோசகர் சமன் ரத்னப்பிரியவுக்கு பணிப்புரை விடுத்தார். இதன்படி இந்த அவசர கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்

# தென்கிழக்கு பல்கலை சர்வதேச ஆய்வரங்கு மறுஅறிவித்தல் வரை ஒத்திவைப்பு

**(ஒலுவில் விசேட நிருபர்)**

தென்கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் சர்வதேச ஆய்வரங்கு மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக, பீடாதிபதி எம்.எச்.ஏ.முனாஸ் தெரிவித்தார்.

இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் பத்தாவது சர்வதேச ஆய்வரங்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 14ம் திகதி நடைபெற இருந்தது. எனினும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் அனைத்து பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் தொடர் வேலை நிறுத்த போராட்டம் காரணமாக குறித்த சர்வதேச ஆய்வரங்கை திட்டமிட்ட திகதியன்று நடாத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் ஆய்வரங்கானது மறு அறிவித்தல் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்ததன் பின் ஆய்வரங்கு நடைபெறும் புதிய திகதி அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார். அனைத்து பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து கடந்த வியாழக்கிழமை (02) நன்பகல் 12 மணி முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# கிழக்கின் குரல்

# ரூ.16 மில்லியன் செலவில் கிராமிய சுகாதார சேவை நிலையம் புனரமைப்பு

**(தோப்பூர் குறூப் நிருபர்)**

மூதூர் சுகாதார பிரிவுக்குட்பட்ட மூதூர் பெரியபாலப் பிரதேசத்தில் 16 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட கிராமிய சுகாதார சேவை நிலையம் உத்தியோகபூர்வமாக மக்கள் பாவனைக்கு திறந்துவைக்கும் நிகழ்வு அண்மையில் சுகாதார வைத்தியதிகாரி முகைதீன் பாவா ஹில்மி தலைமையில் நடைபெற்றது.

நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில் காணப்பட்ட பெரியபாலப் பிரதேச சுகாதார சேவை நிலையத்தை புனரமைப்பதற்கு பல வழிகளிலும் சுகாதார வைத்தியதிகாரி டொக்டர். முகைதீன் பாவா ஹில்மியின் முழு முயற்சியின் கீழ் இக்கட்டடம் புனரமைக்கப்பட்டுள்ளது.



இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கௌரவ அதிதிகளாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துக்கோரள, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், விசேட அதிதிகளாக மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# காரைதீவில் நடமாடும் விற்பனை நிலையங்களில் திடீர் சுற்றிவளைப்பு

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள உணவகங்கள்,பேக்கரிகள்,உணவு தொழிற்சாலைகள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் நடமாடும் விற்பனை நிலையங்கள் போன்றன சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்லிமா பஷீரின் பணிப்புரையின் பேரில் பரிசோதனைக்கு உட்படுத்தபட்டன.

இதன்போது நிறுவன உரிமையாளர்களுக்கு சுகாதார ஆலோசனையும் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. பரிசோதனை நிகழ்வில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அதிகாரிகள் மற்றும் கல்முனை சுகாதார சேவைகள் பணிமனையின் உணவு சுகாதார பிரிவுக்கு பொறுப்பான அதிகாரிகள் என பலரும் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# பிரித்தானிய தூதரகத்தின் முதல் செயலாளர் திருமலைக்கு விஜயம்



**(தம்பலகாமம் குறூப் நிருபர்)**

பிரித்தானிய தூதரகத்தின் முதல் செயலாளர் தொம் சோப்பர் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் (09) மாலை திருகோணமலை இலங்கைத்தமிழரசுக் கட்சியின் மாவட்டப் பணிமனைக்கு விஜயம் செய்தனர்.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற நில ஆக்கிரமிப்பு, வேலைவாய்ப்பு பிரச்சினைகள், பொருளாதார சிக்கல்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் சிக்கல்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக திருகோணமலை மாவட்ட கட்சியின் தலைவர் கதிரவேலு சண்முகம் குகதாசனுடன் கலந்துரையாடினார்.

# திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு ரூ.45 இலட்சம் பெறுமதியான உபகரணங்கள் கையளிப்பு!

**(காரைதீவு குறூப் நிருபர்)**

திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு 4.5 மில்லியன் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஏபி. மசூத் தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சகிலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அவற்றை வழங்கி வைத்தார்.

*(ECG mechine, portable ventilator, BP monitor, pulse oxymetry)* போன்ற உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அச்சமயம் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரும் அங்கு சமூகமளித்திருந்தனர்.

# இலங்கை–சீனா கலாசார நட்புறவுச் சங்கத்தின் உலர் உணவுப் பொதிகள் வழங்கல்

**(பேருவளை பீ.எம்.முக்தார்)**

இலங்கை – சீனா கலாசார நட்புறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் பேருவளை பகுதியில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இலங்கைசீன கலாச்சார நட்புறவச் சங்க நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் சமூக சேவையாளருமான அல்ஹாஜ் இபாம் ஹனபியின் வேண்டுகோளின் பெயரில் முதல் கட்டமாக 50 வரிய குடும்பங்களுக்கு சுமார் 7.500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் பேருவளை சீனன்கோட்டை தர்கா வீதியில் உள்ள கிரவுன் சர்வதேச பாடசாலையில் நடை பெற்ற நிகழ்வில் வைத்து பகிர்ந்தஅளிக்கப்பட்டன.





சங்கத் தலைவர் இந்திரானந்த அபேசேகர,பிரதித் தலைவர் துனில் ஹெய்யன்துடுவ, உப தலைவர் நிசான்த்த விக்ரம சிங்க, தேசிய அமைப்பாளர் நந்தசேன மதவர ஆரச்சி, நிறைவேற்று குழு உறுப்பினர் அல்ஹாஜ் இபாம் ஹனபி, கிரவுன் சர்வதேச பாடசாலை பணிப்பாளர் எம்.ஹிசாம்,சமூக சேவையாளர்களான அல்ஹாஜ் இஸ்மத் ராஸிக், எம்.ரஸ்மி ஹுஸைன் ஆகியோர் நிகழ்வில் பங்குபற்றினர்.



நிகழ்வில் தலைவர் இந்ரானந்த அபேசேகர பேசும் போதுஇலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு மிக நீண்ட வரலாற்றினைக் கொண்டதாகும். இந்த உறவை மேலும் சக்தி பெற செய்யும் வகையில் தான் சீனாஇலங்கை கலாச்சார நட்புறவுச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

இச் சங்கமானது நாட்டின் பல்வேறு பகுதி வாழ் மக்களின் முன்னேற்றத்திற்காக இன, மதம், மொழி, பிரதேச வேறுபாடுகள் இன்றி பணி செய்து வருகிறது. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இவ்வமைப்பானது உலர் உணவு பொதிகளை வழங்கும் ஓர் திட்டத்தை முன்னெடுத்துள்ளது. எமது அமைப்பின் நிறைவேற்று குழு உறுப்பினர் இபாம் ஹனபியின் வேண்டுகோளின் பேரில் இன்று பேருவளை பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படுகிறது.

இலங்கை சீனா சமூக கலாசார நட்புறவுச் சங்கத்தின் (ASLCSOC) அர்ப்பணிப்பின் காரணமாக இரு நாடுகளுக்கு மிடையிலான உறவு மேலும் வலுப்பெற்றுள்ளது. நாட்டின் முன்னேற்றம் கருதி பாரிய வேலை திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

வர்த்தக,கைத்தொழில்,பொருளாதாரம்,சமூக,கலாச்சாரம் உட்பட பல துறைகளிலும் பாரிய போற்றத் தக்க வளர்ச்சிக்காக இவ்வமைப்பு அன்று முதல் இன்று வரை அர்ப்பணிப்புடன் பங்களிப்புச் செய்துள்ளது என்றார்.

நிகழ்வு இறுதியில் பேருவளை பகுதி பாடசாலை மாணவர்களுக்கு சீன மொழி கற்பிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

# நகர்வலம்



# பதுளையில் கோரவிபத்து ஒருவர் பலி: நால்வர் காயம்

லுனுகல நிருபர்



பதுளை – மஹியங்கனை வீதியின் புவக்கொடமுல்ல பிரதேசத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸும் முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதியதில் முச்சக்கரவண்டியில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் படுகாயமடைந்துள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

தெஹியத்தகண்டிய டிப்போவுக்குச் சொந்தமான பஸ் ஒன்று தெஹியத்தகண்டிய சிறிபுரவிலிருந்து பதுளை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது அதற்கு முன்னால் பதுளையிலிருந்து ரிதிபன நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டியுடன் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்த நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்தில் பெண்ணொருவரும் மூன்று ஆண்களும் காயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விபத்தில் முச்சக்கரவண்டிக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன், பஸ்ஸின் அடிப்பகுதியும் சேதமடைந்துள்ளது.

விபத்து தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மலைச்சாரல்



பதுளை மாவட்டத்தின் 12 பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு பெறுமதியான கணினிகளை பாடசாலைகளின் அதிபர்களிடம் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தமது அமைச்சு காரியாலயத்தில் வைத்து கையளித்தார்.

## இடியுடன் மழை பெய்யும் சாத்தியம்

நாட்டின் பெரும்பாலான மாகாணங்களில் பல இடங்களில் பி.ப. 2.00மணிக்குப்பின்னர்மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ, மற்றும் ஊவா மாகாணங்களில் 100 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் புத்தளம் மாவட்டத்திலும் பல இடங்களில் காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சிறுத்தையின் சடலம் மீட்பு

தலவாக்கலை குறூப் நிருபர்



ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வனராஜா தோட்டத்தில் சிறு காயங்களுடன் உயிரிழந்த நிலையில் சிறுத்தையொன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இரண்டு சிறுத்தைகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலால் இந்த சிறுத்தையின் உடலில் காயங்கள் ஏற்பட்டு உயிரிழந்திருக்கலாம் என வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். பிரதேசவாசிகள் இதுதொடர்பில் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தையடுத்து சிறுத்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சிறுத்தையின் சடலத்தை மேலதிக விசாரணைகளுக்காக நல்லதண்ணி வனஜீவராசிகள் காரியாலயத்தில் ஒப்படைக்க ஹற்றன் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# அனுமதியின்றி தேக்கு பலகைகளை ஏற்றிச் சென்ற இருவர் கைது

படல்கும்புரவிலிருந்து பதுளை நோக்கி கொண்டு சென்ற அனுமதியின்றி தேக்கு பலகைகளை ஏற்றிச் சென்ற பொலேரோ ரக லோரியுடன் சந்தேகநபர்கள் இருவர் அண்மையில் கைது செய்யப்பட்டதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 24 மற்றும் 27 வயதுடைய படல்கும்புர பகுதியை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். பசறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பியரத்ன ஏகநாயக்கவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய படல்கும்புர பசறை வீதியின் தோலபோவத்த பகுதியில் வைத்து லொறியை மறித்து சோதனைக்குட்படுத்திய போது 548 அடி தேக்கு பலகைகளை சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரம் இன்றி கொண்டு செல்லும் போது கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்த மற்றும் பதுளை பிரிவுக்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் சில்வா ஆகியோரின் பணிப்புரையின் பேரில் பசறை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## இருவர் தாக்கப்பட்ட சம்பவம்; மூவர் கைது

இரத்தினபுரி கிரியெல்ல தும்பறை தோட்டத்தில் கணவன் மனைவி இருவர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து தோட்ட பிரதி முகாமையாளர் உட்பட மூவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிரியெல்ல பொலிஸ் நிலையத்தில் ஆஜரான போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி கிரியெல்ல தும்பறை தோட்டத்தில் தொழில் புரிந்து வந்த கணவன் மற்றும் மனைவி கடந்த சில தினங்களாக தொழிலுக்கு செல்லவில்லை.

இதனால் இவர்களை மீண்டும் தொழிலுக்கு வருமாறு அழைத்து தாக்கப்பட்டதாகவே குற்றம்சாட்டப்படுகின்றது.

# தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் கம்பனிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள தயார்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்குரிய நகர்வுகளை முன்னெடுத்துவரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இம்மாதம் முதல் காணி உரித்தை வழங்குவதற்குரிய வேலைத்திட்டத்தையும் முன்னெடுக்கவுள்ளது – என்று இ.தொ.காவின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

அட்டன் பகுதியில் 10.05.2024 அன்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, “அரசாங்கத்துக்குரிய ஆதரவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வழங்கி வருவதாலும், இ.தொ.கா பக்கம் மக்கள் சக்தி நிற்பதாலும் பேரம் பேசுதல் மூலம் மக்களுக்குரிய அபிவிருத்தி அரசியல் மற்றும் உரிமை அரசியலை வெற்றிகரமாக காங்கிரஸ் முன்னெடுத்துவருகின்றது.

குறிப்பாக சம்பள உயர்வு விவகாரத்தில் பெருந்தோட்ட கம்பனிகள் இழுத்தடிப்பு போக்கை கடைபிடித்த நிலையில், இது விடயத்தில் அரசு தலையிட்டு நாளொன்றுக்கு ஆயிரத்து 700 ரூபா கிடைப்பதற்கு வழிசமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. கம்பனிகளுக்கு எதிராக தற்போது சட்ட சமரை எதிர்கொள்வதற்கும் தேவையான உதவிகளை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளது.

அத்துடன், மே 26 ஆம் திகதி முதல் சௌமியபூமி திட்டத்தின்கீழ் காணி உரித்து வழங்கப்படும். இது மலையக வரலாற்றில் மகத்தானதொரு அரசியல் வெற்றியாகும். எமது பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சராக இருப்பதால்தான் அமைச்சரவை ஊடாக பல நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிகின்றது. ஆனால் இ.தொ.காவை விமர்சித்தால்தான் சிலருக்கு அரசியல் செய்ய முடியும். சரி, காங்கிரஸால் தான் அவர்களும் வாழ்கின்றனர், வாழ்ந்துவிட்டு போகட்டும். தற்போது மக்களுக்கு சேவை செய்வது யார்? வாய்ச்சொல் அரசியல் நடத்துவது யார் என்பது மக்களுக்கு தெரிந்துவிட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைவிட, அரச நிறுவனங்களின் பிரதானி பதவி மேலானது என நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார். சலுகைகள் கிடைப்பதாகவும் புது விளக்கம் அளித்துள்ளார். சலுகைகளுக்காக எப்போதும் ஏங்கும் அவர், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்துவிட்டு, இப்பதவியை ஏற்றால் நல்லது. ஏனெனில் அதிஉயர் சபையான நாடாளுமன்றம்கூட சிறந்த இடமாக மாறும் – என்றார் பாரத் அருள்சாமி.

# லவர்ஸ்லீப், விநாயகபுரம் மக்கள் 21 நாட்களாக நீர் இன்றி அவதி



நுவரெலியா மாநகர சபைக்கு உட்பட்ட லவர்ஸ்லீப், விநாயகபுரம் மக்கள் கடந்த 21 நாட்களாக நீர் இன்றி பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

பொதுவாக பாடசாலை செல்லக்கூடிய மாணவர்கள் தமது பாடசாலை சீருடைய கழுவுவதற்கு கூட நீர் இன்றி பாடசாலைக்கு செல்லாமல் நீர் தேடி அலையும் ஒரு கடினமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அதேபோல் நுவரெலியா மாநகர சபைக்கு அன்மித்த பகுதிகளில் இவ்வாறான நிலைமையை காணப்படுகிறது.

இது தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் நுவரெலியா மாநகர சபை ஆணையாளருக்கு தெரிவித்திருந்த பொழுதும் இதுவரை அதற்கான நடவடிக்கையில் எடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# வரவுள்ள தேர்தல்களில் தமிழ் மக்கள் வெற்றிபெறும் தரப்பில் கதாநாயகர்களாக இருப்பது அவசியம்

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து!



தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீராப் பிரச்சினையாக வைத்திருந்து அரசியல் ஆதாயம் தேடுவோரின் விருப்பமே தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சி என்று விமர்சித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில், ஒப்பீட்டளவில் வல்லவராக தன்னை நிரூபித்துள்ள ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை தமிழ் மக்களின் வெற்றியாக மாற்றும் வகையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயற்பாடுகள் அமைய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தீவக அமைப்பாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே செயலாளர் நாயகத்தினால் குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சமகால அரசியல் நிலவரங்கள், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் மற்றும் வரவுள்ள தேர்தல் தொடர்பான முன்னெடுப்புக்கள் போன்றவை தொடர்பிலும், அவை சரியான முறையில் மக்களை சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்கு வழங்க வேண்டிய ஒத்துழைப்புக்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தும் வகையில் குறித்த கலந்துரையாடல் அமைந்திருந்தது.

இதன்போது, தேர்தலில் எமது கட்சியின் வாக்குப்பலத்தை அதிகரிப்பு செய்ய வேண்டிய அவசியம் தொடர்பாக வலியுறுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, “தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவலங்களையும் அரசியல் கோஷங்களாக பயன்படுத்தி குறுகிய அரசியல் ஆதாயம் தேடும் தரப்புக்கள், தமது நலன்களுக்காக தமிழ் மக்களை இன்னுமொரு முறை பலிக்கடாவாக்க முனைகிறார்கள்.

இவ்வாறான முட்டாள்தனமான முயற்சிகள் கடந்த காலங்களில் ஆயுதப் போராட்ட குழுக்களினாலும் மிதவாத தமிழ் தலைமைகளினாலும் பலமுறை முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் அவற்றினால் எமது மக்களுக்கு எந்தவித நன்மைகளும் கிடைக்கவில்லை. மாறாக மீளமுடியாத பின்னடைவுகளையே ஏற்படுத்தியிருந்தன.

எனினும், நடைமுறை சாத்தியமான சிந்தனையோ, சரியான வேலைத்திட்டத்தினை முன்வைத்து அதற்காக உழைக்கும் குணாம்சமோ இல்லாதவர்கள், எமது மக்களை உணர்ச்சியூட்டும் தோற்றுப்போன வழிமுறையையே மீண்டும் கையில் எடுத்து தம்மை அரசியலில் நிலைநிறுத்த முனைகிறார்கள்.

ஆனால், ஈ.பி.டி.பி. ஆகிய நாங்கள், எமது மக்களுக்கு சரியான வழியை காட்டுகின்ற தனித்துவமான தரப்பு என்ற அடிப்படையிலேயே செயற்பட்டு வருவதுடன் தேர்தல்களுக்கும் முகம்கொடுத்து வருகின்றோம்.

மக்கள் எதிர்கொள்ளுகின்ற அன்றாடப் பிரச்சினைகள் முதல் அபிவிருத்தி உள்ளடங்கலான அரசியல் தீர்வு வரையிலான மூன்று ‘அ’ க்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் தீர்வுகளை முன்வைக்க கூடிய ஒரு கட்சியாக ஈ.பி.டி.பி மட்டும் தான் இருக்கின்றது. இதில் அனைவரும் தெளிவாக இருப்பதும் அவசியம்.

கடந்த 34 வருடங்களாக பல்வேறு விடயங்களில் அவை நிரூபிக்கப்பட்டு இருக்கின்றன. அதற்கு நாம் கட்டி வளர்த்துள்ள தேசிய நல்லிணக்கமும் கணிசமான பங்களிப்பை செய்திருக்கிறது.

எனவே, அடுத்த வரவுள்ள தேர்தல் என்பது தமிழ் மக்களை வெற்றியின் அடையாளப்படுத்தும் வகையில் எமது செயற்பாடுகளும் மக்களுக்கான தெளிவுபடுத்தல்களும் அமைய வேண்டும்.

அதன்மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை அடைவதற்கான வழியை பிரகாசமாக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் உதயம்

## தெல்லிப்பளை ஒட்டகப்புலத்தில்

# விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பொதுமக்கள் பிரவேசிக்க பாதைகள் திறப்பு



யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஒட்டகப்புலத்தில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கான பாதைகள் திறக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஒட்டகப்புலத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 234.8 ஏக்கர் காணிக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கான பாதைகள் திறக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) மற்றும் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் ஆகியோர் கடந்த 07 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட பகுதிக்கு களவிஜயம் மேற்கொண்டு பாதுகாப்பு தரப்பினருடன் கலந்துரையாடியதன் பலனாக, இரண்டு வீதிகள் திறக்கப்பட்டுள்ளன.

பொன்னாலை பருத்தித்துறை கடற்கரை வீதியில் பலாலி வடக்கு பாடசாலைக்கு அருகிலும், விமான நிலைய வீதியில் மருதடிசந்தியிலிருந்து பலாலி நோக்கி செல்லும் வீரப்பளை வீதியும் திறக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக விமான நிலைய வீதி ஊடாகவும், ஒட்டகப்புலம் பிரதான வீதியூடாகவும் விடுவிக்கப்பட்ட காணிகளுக்கு செல்ல ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வசா விளான் கிழக்கு(J/244), வசாவிளான் மேற்கு(J/245), பலாலி வடக்கு(J/254), பலாலி கிழக்கு(J/253), பலாலி தெற்கு(J/252) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட 234.8 ஏக்கர் காணி அண்மையில் விடுவிக்கப்பட்டது. இங்கு வசித்த 327 குடும்பங்கள் காணி உரிமை கோரி பதிவு செய்துள்ளதுடன், அவர்களில் 171 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களின் காணிகளை அடையாளப்படுத்தி துப்புரவு செய்யும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் ஏனைய மக்களும் தங்களின் காணிகளை அடையாளப்படுத்தி, துப்புரவு பணிகளை ஆரம்பிக்க மிக விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட மூவருக்கும் விளக்கமறியல் உத்தரவு

(வவுனியா விசேட நிருபர்)

ஐஸ் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு பொலிஸ் பரிசோதகர் எச்.எம். ரிஸ்வி தலைமையிலான பொலிஸ் இரகசிய தகவலையடுத்து அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

செட்டிகுளத்தில் வசிக்கும் 35 வயது இளைஞரொருவரை 17 இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வைத்து கைது செய்தனர்.

நீதிமன்ற அனுமதி பெற்று இளைஞன் பொலிஸாரால் தொடர் விசாரணைக்குட்படுத்தப்பட்ட நிலையில் உக்குளாங்குளம், மில் வீதி பகுதியில் வைத்து செட்டிகுளத்தில் வசிக்கும் 36 வயதுடைய இளைஞரும் 12 இலட்சம் பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

# மே 12 சர்வதேச தாதியர் தினத்தில் தாதியரை கௌரவிக்கும் ஹேமாஸ் மருத்துவமனை




இலங்கையில் மிகவும் அபிமானம் பெற்ற சுகாதாரப் பராமரிப்பு வர்த்தகநாமமான ஹேமாஸ் மருத்துவமனை, வெளித்தெரியாத கதாநாயகர்களாகத் திகழும் அதன் தாதிய உத்தியோகத்தர்களே இந்த அர்ப்பணிப்பின் நடுநாயகமாக உள்ளதுடன், அவர்களுடைய ஓயாத அர்ப்பணிப்பும், நிபுணத்துவமும் ஹேமாஸ் மருத்துவமனையின் மகத்துவத்தின் நன்மதிப்பிற்கான அத்திவாரத்தை இடுகின்றன.

அந்த வகையில், சர்வதேச தாதியர் தினத்தில் ஒவ்வொரு நோயாளரும் தமது வீட்டில் வைத்துக் கவனிக்கப்படுகின்றனர் என்ற உணர்வுடன் அவர்களைப் பராமரிக்க உதவுகின்ற அர்ப்பணிப்புமிக்க தனது தாதியரை ஹேமாஸ் மருத்துவமனை கொண்டாடுகின்றது.

ஆண்டுதோறும் மே மாதம் 12 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்ற சர்வதே தாதியர் தினமானது உலகளாவில் தாதியரின் அன்பு, அர்ப்பணிப்பு, பேரார்வம் மற்றும் விடாமுயற்சி ஆகியவற்றைப் போற்றுகின்றது. மருத்துவப் பராமரிப்பின் தராதரங்களில் புரட்சிக்கு வித்திட்டு, நவீன தாதிய நடைமுறைகளை ஸ்தாபித்த, 19 ஆம் நூற்றாண்டின் தாதிய முன்னோடியான, பிரபலம் மிக்க புளோரன்ஸ் நைட்டிங்கேர்ளின் பிறந்த தினமே சர்வதேச தாதியர் தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவரது அயராத அர்ப்பணிப்பு மற்றும் தூரநோக்குடனான தலைமைத்தும் மூலமாக தாதிய துறையில் அழியாத அடையாளத்தை அவர் விட்டுச் சென்றுள்ளதுடன், இன்று வரை பின்பற்றப்படும் பிரகாசமிக்க ஒரு உதாரணமாகவும் அவர் திகழ்கின்றார்.

ஹேமாஸ் வைத்தியசாலையில் தாதியப் பிரிவுக்கான பொது முகாமையாளர் டொறின் டி சூஸா இது தொடர்பில் தெரிவிக்கையில், "எமது தாதிய உத்தியோகத்தர்களின் திறன், அர்ப்பணிப்பு மற்றும் கருணை ஆகியன நோயாளரை மையமாகக் கொண்ட மிகச் சிறந்த கவனிப்பை வழங்கும் எமது உறுதிமொழியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இரவு முழுவதும் தொடர்ந்து விடாமுயற்சியுடன், ஒப்பற்ற அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் எமது தாதிய அணி சில சமயங்களில் தமது இரவு கடமை நேரத்தை அடுத்த நாள் வரை நீட்டிக்கின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன. அவர்கள் தம்முடைய தனிப்பட்ட கடமைகளுக்கு மத்தியிலும், நோயாளர்கள் மீதான அக்கறையின் அர்ப்பணிப்புக்கு முன்னுரிமையளித்து, கடமையையும் மீறி தமது அன்பையும், கருணையையும் வெளிப்படுத்துகின்றனர்." என்று குறிப்பிட்டார்.




## தொலைபேசி இணைப்பிற்கு ஹட்ச் வழங்கும் புரட்சிகரமான அணுகுமுறை

தொலைபேசி இணைப்புக்களை மக்கள் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளில் ஒரு புதுமையான மாற்றத்தை அறிமுகப்படுத்தி, டிஜிட்டல் யுகத்தில் ஒப்பற்ற அறிவுக்கூர்மை மற்றும் முற்போக்கான சிந்தனை ஆகியவற்றைக் காண்பித்து, தேச மட்டத்திலான தனது #GetHUTCHed QR Codes பொது விரைவுக் குறியீடுகளை ஹட்ச் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்துறையை முற்றிலும் மாற்றியமைக்கும் வல்லமை படைத்த இம்முயற்சியானது மிக இலகுவாக QR குறியீட்டை ஸ்கான் செய்து ஹட்ச் வலையமைப்பில் எவ்வித மான சிரமங்களுமின்றி இணைந்து கொள்வதற்கு இலங்கை மக்களுக்கு இடமளிக்கின்றது. சௌகரியத்திற்கு புதிய வரைவிலக்கணம் வகுத்து, இந்த QR பொது விரைவுக் குறியீடுகள், நாடெங்கிலும் வீதிகள் மற்றும் மக்கள் எந்நேரமும் ஒன்றுகூடும் புகையிரத நிலையங்கள் என கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

சாதுரியம் என்பது அதன் எளிமையிலேயே தங்கியுள்ளது. ஒருவர் இதனை விரைவாக ஸ்கான் செய்து, ஒரு எளிமையான டிஜிட்டல்மயமாக்கப்பட்ட நடைமுறை மூலமாக ஹட்ச் இணைப்பொன்றுக்கு விண்ணப்பிக்க முடியும். ஒரு சில நிமிடங்களில் தொலைபேசிகளுக்கான




இணைப்பிற்கான பதிவிறக்கம் செய்யப்படக்கூடிய eSIM ஆக இருந்தாலும் சரி அல்லது உங்களுடைய வீடுகளுக்கே நேரடியாக விநியோகம் செய்யப்படுகின்ற ஒரு SIM அட்டையாக இருந்தாலும் சரி, அனைவரும் இதனை தாம் விரும்பியவாறு முன்னெடுக்கும் தெரிவு உள்ளது.

ஹட்ச் நிறுவனம் சமீப காலங்களில் டிஜிட்டலை முன்னிலைப்படுத்தும் பல்வேறு முயற்சிகளில் முன்னோடியாகச் செயல்பட்டு வந்துள்ளதுடன், மொபைல் தொலைதொடர்பாடல்கள் துறையில் வளர்ச்சியையும் முன்னின்று கொண்டு செல்கின்றது.

# இலங்கையின் பெண் கட்டட கலைஞர் மினெட் டி சில்வா

வரலாற்றில் பொதுவாக ஆண்கள் பெரும்பாலும் ஆதிக்கம் செலுத்தும் துறையில், மினெட் டி சில்வா (1918–1998) முதல் பெண்மணியாக கட்டிடக் கலை மட்டுமல்லாது எழுத்து, கற்பித்தல் மாறும் கற்கைநெறிகையிலும் முன்னோடியாவர். இலங்கையின் பெண் கட்டிடக் கலைஞரான டி சில்வா—Studio of Modern Architecture—எனும் கட்டிடக்கலை பணியிடத்தை 1948ம் ஆண்டு கானிடையில் தொடங்கினார். தனது சொந்த கட்டிடக்கலை பணியிடத்தை உலகிலேயே முதலாவது பெண்ணாக தொடங்கியவராவார். Royal Institute of British Architects (RIBA) 1948ம் ஆண்டு முதலாவது ஆசிய பெண்மணியாக துணைமையாவராக தேர்வு செய்யப்பட்டார். மேலும் Sri Lanka Institute of Architects (SLIA) 1966ம் ஆண்டு அவரின் கட்டிடக்கலை துறையில் உன்னதமான பங்களிப்புக்கு தங்கப்பதக்கம் வழங்கினர். டி சில்வாவின் கட்டிடக்கலை பண்பான்மையானது நவீன மற்றும் பாரம்பரிய இலங்கை அழகியலைக் கொண்ட தனித்துவம் பெற்றதாகும். எளிமையான, நடைமுறைக்கு ஏற்ப மற்றும் உள்ளூர் கலாசாரத்திற்கு ஏற்ப இலங்கையின் பாரம்பரிய கைவேலை முறைகளை அவர் தனது கட்டிடக் கலையில் உள்ளடக்கினார்.



டி சில்வா அனைவருக்குமான வசிப்பிடம், எல்லோரும் சௌகரியமாக வாழக்கூடிய அழகாக வடிவமைக்கப்பட்ட வீடுகள் அனைவருக்கும் உரித்தானது என தீவிரமாக நம்பினார். அவரின் பணியில் அவரின் சமூக பொறுப்பை மற்றும் கட்டிடக் கலைஞர் ஒருவரால் மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கக் கூடிய சக்தியை உணர்ந்தமையை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

'88 ஏக்கர்கள்: மினெட் டி சில்வாவின் வடபுழுவ வீட்டுத் திட்டம்' கண்காட்சியானது நவீன மற்றும் சமகால கலைக்கான இலங்கை அருங்காட்சியகத்தில் (MMCA இலங்கை), ஜூலை 7 வரை, வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்த அரசாங்க பணியாளர்களுக்கான விலை மலிவான வசிப்பிடத்தை உருவாக்கி, தனது சமூக பொறுப்பை கட்டிடக்கலையினூடாக இலங்கையில் முன்னெடுத்த நபராவார்.

# அநுராதபுர நெல் விவசாயிகளுக்கு ட்ரோன் தொழில்நுட்ப விழிப்புணர்வு நிகழ்வினை நடத்திய கொமர்ஷல் வங்கி

இலங்கையின் மகாவலி அதிகார சபையுடன் இணைந்து கொமர்ஷல் வங்கி ஏற்பாடு செய்த விழிப்புணர்வு நிகழ்வினில் இலங்கையின் வடமத்திய மாகாண விவசாயிகள் விவசாய நடைமுறைகளை நவீனமயமாக்குவதில் டிரோன்களின் பங்களிப்பினை வெளிப்படுத்தினர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் தம்புத்தேகம பிரதேசத்தில் உள்ள 100 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் சில மாணவர்களுக்கும் நெற்பயிர்களை விதைப்பதற்கும் உரம் மற்றும் விவசாய இரசாயனங்களைப் பயன்படுத்துவதற்கும் ட்ரோன்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து நிபுணர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த விலைமதிப்பற்ற அறிவுசார் நேரடி செயல்விளக்கங்கள், இலங்கை மகாவலி அதிகாரசபையின் பிரதிநிதிகள் மற்றும் ட்ரோன் தீர்வுகளை வழங்கும் நிறுவனமான ஏரோஜெனி ட்ரோன் சேர்வீசஸ் பிரதிநிதிகளினால் இத்திட்டத்துக்கு மூலகாரணியாக அமைந்த வங்கியின் அபிவிருத்தி கடன் திணைக்கள அதிகாரிகளின் ஆதரவுடன் நடத்தப்பட்டுள்ளது.



கொமர்ஷல் வங்கியின் தனிப்பட்ட வங்கியியல் பிரதிப் பொது முகாமையாளர் டிலக்ஷன் ஹெட்டியாராச்சி தெரிவிக்கையில், "உணவுப் பயிர்கள் விளைவித்தல், அறுவடை செய்தல் மற்றும் பதப்படுத்துதல் போன்றவற்றில் புரட்சியை ஏற்படுத்தும் பொருத்தமான தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பின்பற்றுவதன் மூலம் இலங்கையின் விவசாயம் நவீன யுகத்திற்கு மாற வேண்டும்" என்றார்.

தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு மேலதிகமாக .ட்ரோன்கள் மற்றும் பிற கண்டுபிடிப்புகளின் பயன்பாடு எவ்வாறு அதிக செலவு குறைந்ததாகவும் நேரத்தை மீதப்படுத்துவதாகவும் உள்ளது என்பதை விவசாயிகளுக்கு கற்றுத்தருவதன் மூலம் நெல் விவசாயம் மற்றும் இதர பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் நவீன தொழில்நுட்பத்தை பின்பற்றுவதை ஊக்குவிப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும் என்று வங்கி தெரிவித்துள்ளது.

# விவசாய, பெருந்தோட்ட அமைச்சுடன் நிலைபேறான தேயிலை உற்பத்திக்காக யூனிலீவர் ஸ்ரீ லங்கா புரிந்துணர்வு ஒப்பந்தம்

விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, யூனிலீவர் ஸ்ரீ லங்கா ஆகியன நிலைபேறான தேயிலை உற்பத்திக்காக நாட்டின் முதலாவது தேசிய மற்றும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரத்தை உருவாக்க, அண்மையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் (MoU) மூலம் இணைந்துள்ளன. முதன் முறையாக மேற்கொள்ளப்படும் இவ்வாறான திட்டமானது, இலங்கை தேயிலைத் தொழில்துறையை மிகவும் நிலைபேறான மற்றும் நெறிமுறையான எதிர்காலத்தை நோக்கி கொண்டு செல்வதற்கான இரு தரப்பினதும் அர்ப்பணிப்பைக் காட்டுகிறது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் B.L.A.J தர்மகீர்த்தி, இலங்கை தேயிலை சபையின் தலைவர் மற்றும் அதன் பிரதிநிதிகள், தேயிலை துறையைச் சேர்ந்த மேலும் பல உயரதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

யூனிலீவர் ஸ்ரீ லங்காவின் 'Ceytea' தொழிற்சாலையானது, Global PepsiLipton JV மற்றும் அதன் உலகப் புகழ்பெற்ற Iced Tea வர்த்தக நாமங்களான 'Lipton' மற்றும் 'Brisk' ஆகியவற்றிற்கு கறுப்பு தேயிலைச் சாற்றை வழங்கும் மிகப் பாரிய விநியோகஸ்தராக விளங்குகின்றது. அகரபத்தனயில் உள்ள இந்த உற்பத்தித் தளம், பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலையை வழங்குவதற்கான புத்தாக்கம் மற்றும் நிலைபேறான தன்மையின் மையமாக காணப்படுகின்றது.



யூனிலீவர் ஸ்ரீ லங்காவின் விநியோகச் சங்கிலிப் பணிப்பாளர் தமித் அபேரத்ன இது பற்றி தெரிவிக்கையில், "அகரபத்தனயில் உள்ள யூனிலீவர் Ceytea தொழிற்சாலையானது, Global PepsiLipton JV நிறுவனத்திற்கு கறுப்பு தேயிலைச் சாற்றை அதிகளவில் வழங்கி வருகின்றது. விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சுடனான இந்த ஒத்துழைப்பானது, யூனிலீவரின் காலநிலை சார்ந்த நடவடிக்கைத் திட்டத்தின் கீழ், நிலைபேறான விவசாய மூலப்பொருட்களின் ஆதாரத்தை ஊக்குவிப்பதற்கான எமது முயற்சிகளில் ஒரு குறிப்பிடும் படியாகும். இம்முயற்சியானது 'Ceylon Tea' இற்கு சாதகமான பலனை வழங்கும். காரணம், நிலைபேறான விவசாய உற்பத்தியே இன்று உலகளாவிய தேவையாக உள்ளது." என்றார்.

இந்த கூட்டாண்மை தொடர்பில் கருத்து தெரிவித்த விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திரு. B.L.A.J தர்மகீர்த்தி "இந்த அரச தனியார் கூட்டுறவில் யூனிலீவர் ஸ்ரீ லங்காவுடன் இணைந்து கொள்வதில் விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு பெரு மகிழ்ச்சியடைகிறது. இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையானது இலங்கை தேயிலை தொழிற்சாலைகளின் உலகளாவிய போட்டித்தன்மையை வலுப்படுத்துவதற்கான ஒரு முக்கியமான படியாக அமைகிறது." என்றார்.



# அமானா வங்கியின் சித்தீக் அக்பர், AAFI இன் தலைவராக நியமனம்

அமானா வங்கியின் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவர் சித்தீக் அக்பர், மாற்று நிதிச் சேவை நிறுவனங்களின் சம்மேளனத்தின் (AAFI) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமையை அமானா வங்கி கௌரவித்துள்ளது. வட்டிசாராத இஸ்லாமிய வங்கிகள் பிரிவில் சித்தீக் கொண்டுள்ள தலைமைத்துவத்தை உறுதி செய்யும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தின் போது இந்த நியமனம் வழங்கப்பட்டிருந்தது. சந்தைப்படுத்தல் மற்றும் கூட்டாண்மை தொடர்பாடல்கள் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர் எனும் நிலையில் அமானா வங்கியுடன் சித்தீக் இணைந்து கொண்டதுடன், பின்னர் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவராக அவர் பதவி உயர்வு பெற்றிருந்தார். அமானா வங்கியுடன் இணைந்து கொள்வதற்கு முன்னதாக, நிதி, தொலைத்தொடர்பாடல் மற்றும் நுகர்வோர் இலத்திரனியல் போன்ற துறைகளில் சந்தைப்படுத்தல் முகாமையாளர் மற்றும் வர்த்தக நாம முகாமையாளர் எனும் பதவிகளை இவர் வகித்துள்ளார். இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் பொருளாளராகவும் சித்தீக் செயலாற்றியுள்ளார்.

தொழிற்துறையில் அமானா வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தி, பல்வேறு உள்நாட்டு மற்றும் சர்வதேச இஸ்லாமிய வங்கியியல் மற்றும் நிதியியல் அமர்வுகளில் பிரதான வளவாளராக சித்தீக் உரையாற்றியுள்ளதுடன், தொழிற்துறையினுள் தமது நிபுணத்துவ அறிவுக்காக நன்மதிப்பையும் பெற்றுள்ளார்.

# இலங்கையில் DJI இன் தொழில்நுட்ப புத்தாக்க கண்டுபிடிப்புகளை வெளியிடும் தக்ரால்

இலங்கையில் DJI இன் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரான தக்ரால் குழுமம், "சாத்தியத்தின் எதிர்காலம்" நிகழ்வை அண்மையில் முன்னெடுத்திருந்தது. இந்த பிரத்தியேக நிகழ்வானது, நாட்டின் புத்தாக்கம் மற்றும் முன்னேற்றத்திற்கான இடைவிடாத முயற்சிக்கு ஒரு சான்றாக அமைந்திருந்தது.



இந்த நிகழ்வானது, DJI இன் சமீபத்திய வெளியீடுகள், நுகர்வோர் இலத்திரனியல் சாதனங்கள், நிறுவனங்களுக்கான தீர்வுகள், விவசாய தொழில்நுட்பம் மற்றும் விநியோக முறைகள் ஆகிய விடயங்களில் ஒரு ஆழமான அனுபவத்தை வழங்கியது. உயர்செயற்றிறன் கொண்ட ட்ரோன்கள் முதல் பல்வேறு தொழில்துறைகளுக்கு ஏற்றவாறான பிரத்தியேக தீர்வுகள் வரை, DJI யின் அதிநவீன சலுகைகளை அறிந்த அனைவருக்கும் இது மேலும் உத்வேகத்தை ஏற்படுத்தியது.

சிவிலியன் ட்ரோன்கள் மற்றும் ஏரியல் இமேஜிங் தொழில்நுட்பத்தில் உலகளாவிய முன்னணி நிறுவனமான DJI, தொழில்துறைகளில் புரட்சியை ஏற்படுத்துவதற்கும், அன்றாட வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் ஏற்றவாறு அதன் சமீபத்திய தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளை வெளியிட்டுள்ளது. இந்நிகழ்வில் DJI நிபுணர்கள் தங்களது தயாரிப்புகளின் நடைமுறை பயன்பாடுகளை தெளிவுபடுத்தினர்.

**ஒற்றுமை, பொது உடன்பாட்டுடன் முன்னோக்கிச் சென்றால் இலங்கையை உலகில் அபிவிருத்தியடைந்த நாடாக விரைவில் உயர்த்த முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



# நாட்டின் முன்னேற்றத்துக்கு பொது உடன்பாடு அவசியம்!

## பாராளுமன்றத்தில் ஜனாதிபதி விசேட உரை



நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பை நழுவ விட வேண்டாமெனக் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த இக்கட்டான நேரத்தில் நாட்டை விட்டு தனிப்பட்ட இலட்சியங்களை கருத்தில் கொண்டு செயல்படுவது மாபெரும் அழிவின் ஆரம்பமாக அமையும் என்றார்.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் மாத்திரமின்றி மதத் தலைவர்கள், தொழிற்சங்கங்கள், வர்த்தக சமூகம், அரசசார்பற்ற அமைப்புகள், வெவ்வேறான சிந்தனைகள் கொண்ட தலைவர்கள், சமூகத்தில் தாக்கம் செலுத்தக்கூடியவர்கள் உள்ளிட்ட சகலரும் பொது உடன்பாட்டுடன் இணைந்துகொள்ள வேண்டியது அவசியம் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி நேற்று முன்தினம் ஆற்றிய விசேட உரையின் போதே இவ்வாறு தெரிவித்தார். பாராளுமன்றத்தில் ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றிய போது,

"நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பணியை நான் பொறுப்பேற்ற பின்னர் பொருளாதாரத்தின் உண்மையான நிலை குறித்த அனைத்து தகவல்களையும் அவ்வப்போது இச்சபையில் கூறியுள்ளேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக முன்னெடுத்த பொருளாதார திட்டங்களையும் எதிர்கால பொருளாதார திட்டங்கள் குறித்த உண்மைகளையும் கூறினேன். பற்றி எரிந்துகொண்டிருந்த நாட்டையே நான் பொறுப்பேற்றேன். நாடு நரகமாக மாறியிருந்தது. பொருளாதாரம் முடங்கிக் கிடந்தது. பணவீக்கம் 70 சதவீதமாக உயர்ந்திருந்தது.

மொத்த தேசிய உற்பத்தியில் 10-12 சதவீதத்திற்கும் அதிகமாக வரவு செலவுத் திட்ட பற்றாக் குறை அதிகரித்திருந்தது. வட்டி வீதம் 30 சதவீதமாக உயர்ந்திருந்தது. டொலரின் பெறுமதி சுமார் 450 ரூபா வரையில் அதிகரித்திருந்தது. அந்நியச் செலாவணி கையிருப்பு பூஜ்ஜியமாகிப் போனது.

ஒரு வாரத்திற்கு கூட உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய பணம் இருக்கவில்லை. நாட்டில் பெரும்பகுதியானோர் வீதிகளில் இறங்கினர். பல நாட்களாக மக்கள் வரிசையில் நின்றனர். பல எதிர்ப்பு போராட்டங்களில் பங்கெடுத்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் நாட்டையும் பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்பும் சவாலை நான் ஏற்றுக்கொண்டேன். அந்த நேரத்தில் நாட்டைக் காப்பாறும் சவாலை ஏற்க எவரும் முன்வரவில்லை. பல்வேறு நிபந்தனைகளை முன்வைத்தனர். ஆனால் நான் நிபந்தனையின்றி நாட்டை பொறுப்பேற்றுக்கொண்டேன். பாராளுமன்றத்தில் எனது கட்சிக்கு ஒரே ஒரு ஆசனம் மட்டுமே இருந்தது.

அத்தகைய ஆபத்தான சூழலிலே இந்தப் பணிகளை தோளில் ஏற்றுக்கொண்டேன். மூன்று காரணங்களுக்காகவே சவாலை ஏற்றுக் கொண்டேன். என்னிடம் ஒரு திட்டம் இருந்தது. அனுபவம் இருந்தது. சர்வதேச தொடர்புகள் இருந்தன. அதனால் நரகத்தில் விழுந்த இந்த நாட்டை மீட்க முடியும் என்ற நம்பிக்கையும் என்னிடம் இருந்தது.

அப்போதிருந்து நாங்கள் பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் மறுசீரமைப்புத் திட்டங்களை முறையாக செயல்படுத்த ஆரம்பித்தோம். இதன் பலனாக 2023ஆம் ஆண்டின் மத்தியில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது.

இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி குறைந்தது மூன்று சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம். பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் இதனை எதிர்வுகூறியுள்ளன. பணவீக்கம் தற்போது 1.5 சதவீதமாக குறைந்துள்ளது. பல ஆண்டுகளாக பற்றாக்குறையாக இருந்த முதன்மை கணக்கு கையிருப்பு, 2023 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.6 சதவீத உபரியாக மாற்றப்பட்டது.

பல தசாப்தங்களுக்குப் பிறகு 2023ஆம் ஆண்டில் நடப்புக் கணக்கில் ஒரு உபரி நிலுவைத் தொகை ஏற்பட்டது. வட்டி விகிதம் 10-13 சதவீதம் வரையில் குறைந்துள்ளது.

சுற்றுலாத்துறை புத்துயிர் பெற்றுள்ளது. வெளிநாட்டு பணியாளர்கள் அதிகளவில் பணம் அனுப்புகிறார்கள். 2024 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் டொலரின் பெறுமதியை 300 ரூபாவை விடவும் குறைவாக கொண்டுவர முடிந்தது. அந்நியச் செலாவணி கையிருப்பு 5 பில்லியன் டொலர்களுக்கு மேல் அதிகரித்துள்ளது.

சவாலான, கடினமான, சரியான பாதையை நாங்கள் பின்பற்றியதால் இந்த நிலையை எங்களால் அடைய முடிந்தது. இந் நாட்டில் சிலர் நாங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் விமர்சித்தார்கள்.

IMF இன் ஆதரவு முதல் நாட்டின் பொருளாதார ஒழுங்கமைப்புக்கான அனைத்துச் செயற்பாடுகளையும் விமர்சித்தனர். ஆனால் அந்த விமர்சனங்கள், அவதூறுகள், கட்டுக்கதைகள் என அனைத்துக்கும் மத்தியில் நாம் தொங்கு பாலத்தை கடக்க முயற்சித்தோம். அது மட்டுமே ஒரே வழியாகும் என்பதையும் நாம் உணர்ந்து கொண்டிருந்தோம்.

2023 செப்டெம்பர் முதல், படிப்படியாக முன்னேறினோம். பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளில் விலைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அரசின் வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீதமாக சரிவடைந்திருந்தது. அதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 சதவீதமாக காணப்பட்ட அரசின் செலவினங்களை நிர்வகிக்க வருவாய் போதுமானதாக இருக்கவில்லை. அதனால் அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் காணப்பட்டது.

இதற்கு முன்பிருந்த சில அரசாங்கங்கள், தொழில் வழங்கவும் சம்பளத்தை வழங்கவும், எரிபொருள், மின்சாரம், குடிநீர் சேவைகளைக் குறைந்த செலவில் வழங்கவும், வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை நிவர்த்திக்கவும் வெளி நாடுகளிடம் கடன் பெற்றிருந்தனர். இல்லாவிட்டால் பணத்தை அச்சிட்டன. பல வருடங்களாக இதே முறையில் பழகியிருந்ததால், நாம் ஏற்படுத்திய மாற்றத்தை தாங்கிக்கொள்வது கடினமாக இருந்தது. ஆனால் நாட்டின் முன்னேற்றத்துக்கான மாற்றத்தை ஏற்படுத்த யாராவது முன்வர வேண்டியது அவசியம்.

தொடர் சீர்திருத்தங்கள் மூலம் நாட்டில் நிதி ஒழுக்கத்தை உறுதி செய்தோம். பொருளாதார ஸ்திரத் தன்மையை ஏற்படுத்த அடுத்தபடியாக கடன் மறுசீரமைப்பை செய்ய வேண்டியிருந்தது.

2022 செப்டெம்பரில் IMF உடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கும் அதுவே காரணமாகும். 2022 டிசம்பரில் மொத்தக் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 128 சதவீதமாக காணப்பட்டது. அது நல்ல நிலைமையாக தெரியவில்லை. அதனால், கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை செயல்படுத்தினோம். அதனை மூன்று கட்டங்களின் கீழ் செயற்படுத்தினோம்.

அதில் முதலாவதாக கடன் மறுசீரமைப்பு. அந்த பணி 2023 ஆம் ஆண்டில் நிறைவடைந்தன. இரண்டாவதாக, வெளிநாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் உத்தியோகபூர்வமாக பெறப்பட்ட கடனை மறுசீரமைக்க வேண்டியிருந்தது. அந்த நாடுகளுடனான கலந்துரையாடலுக்கு பின்பு 2023 நவம்பருக்குள் இந்தக் கடன்களை மறுசீரமைப்பது குறித்து கொள்கை ரீதியான உடன்பாட்டை எட்ட முடிந்தது.

அதற்காக பாரிஸ் கிளப் (Paris Club) மற்றும் அதில் இணையாத சீனா போன்ற நாடுகளும் இணக்கம் தெரிவித்தன. தற்போது கடன் வழங்கிய நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து அந்த பணிகளை நிறைவுக்கு கொண்டுவர வேண்டியது அவசியம்.

இலங்கை அரசாங்கம் தற்போது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுடன் (Official Creditors Committee) கலந்துரையாடுகிறது. அதேபோல், சீன EXIM வங்கியுடனும் இந்த கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மூன்றாவதாக வணிகக் கடன் மறுசீரமைபுச் செயற்பாடுகள் காணப்பட்டன. இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பணிபுரியும் லாசார்ட் (Lazard) மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் (Clifford Chance) ஆகிய ஆலோசனை நிறுவனங்கள் கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

இரு தரப்பிலும் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது. இந்த வருடத்தின் மத்தியில் இந்த கலந்துரையாடல்கள் அனைத்தையும் நிறைவு செய்ய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். 2032 ஆம் ஆண்டுக்குள் மொத்தக் கடனை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 95 சதவீதமாகக் குறைப்பதே கடன் மறுசீரமைப்பின் இறுதி இலக்காகும். அரசாங்கத்தின் மொத்த நிதித் தேவையை ஆண்டுதோறும் 13 சதவீதமாகவும், வெளிநாட்டுக் கடன் சேவையை வருடாந்தம் 4.5 சதவீதமாக பேணுவதும் அடுத்த இலக்காக உள்ளது.

கடன் நிலைத்தன்மையை அடைவதற்கான ஒரே வழி இதுதான். கடன் நிலைத்தன்மையை உறுதி செய்யாமல் நீண்டகால அடிப்படையில் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவது சாத்தியமில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் IMF உதவியுடன் நடத்தப்பட்ட அரச சோதனை அறிக்கையின்படி (Governance Diagnostic Report) ஊழலுக்கு எதிரான திட்டத்தை செயல்படுத்த ஆரம்பித்திருக்கிறோம்.

கடந்த இரண்டு வருடங்களாக நாம் நடைமுறைப்படுத்திய பொருளாதார மறுமலர்ச்சி வேலைத்திட்டத்தின் பெறுபேறுகள் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்க முடிந்திருக்கிறது. அஸ்வெசும உள்ளிட்ட ஏனைய நிவாரணத் திட்டங்களின் கீழ் நாட்டில் உள்ள வறிய மக்களுக்கும் பெருமளவிலான நிதியை நேரடியாக கொண்டு சேர்க்க முடிந்தது. சிறுநீரக நோயாளிகள், முதியோர், ஊனமுற்றோர் ஆகிய தரப்பினருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் 2024 ஏப்ரல் முதல் 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் சமுர்த்தியை விட மூன்று மடங்கு அதிகமான பணம் வறிய மக்களை சென்றடைகிறது. இந்த நிவாரணத் திட்டங்களுக்காக 2024 ஆம் ஆண்டில் 205 பில்லியன் ரூபா செலவிடப்படும். இரண்டாம் உலகப் போரின் பின்னரே இலங்கையில் முதன்முதலில் நிவாரணத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் இத்தகைய தொகை நிவாரணம் வழங்குவதற்காக செலவிடப்படவில்லை.

2022 ஆண்டு சிறுபோகத்திலும், 2022/23 பெரும் போகத்திலும், 2023 சிறு போகத்திலும், 2023/24 பெரும் போகத்திலும் வெற்றிகரமான அறுவடையைப் பெற்றுக்கொண்டோம். அவற்றில் ஒரு பகுதியை இலவசமாக மக்களுக்கு பகிர்ந்தளிக்க அரசாங்கம் எதிர்பார்த்தது.

அதன்படி கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் தமிழ், சிங்களப் புத்தாண்டுக் காலத்தில் வறிய மக்களுக்கு இலவச அரிசி வழங்கப்பட்டது. இனி வரும் காலங்களிலும் வறிய மக்களின் மேம்பாட்டுக்கான அனைத்து முயற்சிகளையும் அரசாங்கம் முன்னெடுக்கும். 2024 ஆம் ஆண்டில் 12 பில்லியன் ரூபாவை செலவிட எதிர்பார்க்கப்படுகிறது.

2024 ஜனவரி முதல் அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் 5000 ரூபா வாழ்வாதார கொடுப்பனவாக வழங்கப்பட்டது. தற்போது 10,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் முதல் ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு 2,500 ரூபாய் கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும் போது இது போதுமானதாக இல்லை. இருப்பினும் அரசாங்கத்தினால் இயன்ற அளவில் இந்த நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ரூபாயின் பெறுமதி அதிகரித்திருப்பதால், கடந்த சில மாதங்களில் இறக்குமதி பொருட்களின் விலையும் கணிசமாக குறைந்துள்ளது. அதனால் எரிவாயு, கனிய எண்ணெய், பால்மா போன்றவற்றின் விலைகளும் குறைந்தன. மேலும், வட்டி வீதம் குறைவதால் தொழில் துறையினருக்கும் நிவாரணம் கிடைக்கும்.

2024 ஆம் ஆண்டிலும் சம்பள அதிகரிப்பு தொடர்பிலான கோரிக்கைகள் வந்தாலும் அரசாங்கத்தின் வருமானம் அதற்கு தகுந்த வகையில் அதிகரிப்பை காட்டவில்லை. கடந்த காலங்களில் பொறுப்பற்ற முறையில் வழங்கப்பட்ட பல்வேறு சலுகைகள் எமது பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்க்கையையும் அழித்தது. அனைத்துப் பிரிவு மக்களும் கடந்த இரண்டு வருடங்களாக மிகவும் கடினமான பாதையில் பயணிக்கின்றனர்.

2024 ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சியை கவனத்தில் கொண்டு சம்பளத் திருத்தம் குறித்து தீர்மானிக்க முடியும்.

இப்போது செயற்படுத்தப்படும் பொருளாதாரத் திட்டங்களை கைவிட்டால் மீண்டும் பெரும் நெருக்கடியைச் சந்திக்க நேரிடும். 2022 செப்டெம்பர் முதல் IMF வேலைத்திட்டத்தின் மூலம் பல சாதகமான பலன்களை அடைந்துள்ளோம்.

பெரும்பாலும் வெளிநாட்டு பரிவர்த்தனைகளைச் சார்ந்து இருக்கும் சிறிய பொருளாதாரம் என்பதால், நாம் ஏற்றுமதியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மேலும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் பசுமைப் பொருளாதாரம் குறித்து கவனம் செலுத்த வேண்டும். தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட புதிய தொழில்நுட்ப அம்சங்களை பொருளாதார செயற்பாடுகளில் இணைத்துக்கொள்ள வேண்டும்.

அவ்வாறின்றி, ஒரு பொருளாதாரத்தை நீண்ட காலத்திற்கு நிலைநிறுத்த முடியாது. பொருளாதாரச் சீர்திருத்தங்களின் பலன்களை சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் முறையாகப் பகிர்ந்தளிப்பதை மையமாகக் கொண்ட சமூகசந்தை பொருளாதார அடித்தளத்தை நாம் நிறுவ வேண்டும்.

நமது பொருளாதார வலிமையை அதிகரிக்க, விரைவான பொருளாதார வளர்ச்சிப் பாதையில் நாம் பயணிக்க வேண்டும். உயர் பொருளாதார வளர்ச்சியால், நமது கடன் சுமை குறையும். அதுமட்டுமின்றி வாழ்க்கைச் செலவும் குறையும்.

தொடர்ந்தும் மக்கள் மீது சுமையேற்றும், நட்டத்தில் இயங்கும் அரச தொழில்முயற்சிகளை எமது பொருளாதாரத்தால் முன்னெடுக்க முடியவில்லை. இதற்கான மாற்றுத் திட்டமொன்றை அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.

தனியார் துறையின் பங்களிப்பின் மூலம் அரச நிறுவனங்களை வெற்றிகரமாக நடத்த முடியுமென்றால், மக்கள் மீது வரிச் சுமையை ஏற்றி, நட்டத்தை ஏற்படுத்தும் அரச தொழில்முயற்சிகளை அப்படியே தொடரக்கூடாது.

நாட்டில் பெருமளவிலான காணிகள் முறையாகப் பயன்படுத்தப்படாமல் மக்களுக்குச் சுமையேற்றும் வகையில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த காலங்களில், அந்த காணிகளில் தனியார் துறையால் வெற்றிகரமான விவசாய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்தத் திட்டங்களின் மூலம் அன்றிருந்த அரசாங்கங்கள் அதிக வருமானம் பெற்றன. அந்தச் செயற்பாடுகளின் மூலம் நாட்டுக்கு அதிக அந்நியச் செலாவணியும் கிடைத்தது.

எனவே, வர்த்தக ரீதியில் செயற்படும் ஏற்றுமதியில் கவனம் செலுத்தும் உள்நாட்டு தனியார் துறையின் பங்களிப்புடன் வர்த்தக ஏற்றுமதி விவசாயப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கையை எடுத்துள்ளோம்.

1930களின் பின்னர் சுமார் 20 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு அவர்களது காணி உரிமையை வழங்கும் 'உறுமய' வேலைத்திட்டம் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டம் அவர்களுக்கு காணியின் முழு உரிமையையும் வழங்குகிறது. இத்திட்டத்தின் அடிப்படையில் இலங்கை முழுவதும் ஆயிரக்கணக்கான விவசாய வர்த்தகர்கள் உருவாவதை தடுக்க முடியாது.

மேலும், தற்போதுள்ள விவசாய நிலங்களில் இருந்து உச்ச அளவில் பயனை பெற்றுக்கொள்வது அவசியம். அதன்படி விவசாய உற்பத்தியை மேம்படுத்தும் அடிப்படையில் விவசாய நவீனமயமாக்கல் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் விவசாயிகளை வலுப்படுத்துவது இந்தத் திட்டத்தின் ஒரு நோக்கமாகும்.

தற்போது 26 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களில் மேலும் 75 பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த வேலைத்திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தில் மிகவும் வலுவான துறையாக இருந்த பல்வேறு சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் செயலிழந்தன. அந்த வணிக நிறுவனங்கள் மூடப்பட்டன. அவற்றை மீட்டெடுப்பதற்கான திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பாரிய அளவில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. பல்வேறு கடன் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பராட்டே சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்ட குறுகிய காலத்திற்குள் இத்துறைக்கு மேலும் ஒரு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. திறைசேரியில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான விசேட பிரிவும் நிறுவப்பட்டு செயல்பாடுகள் ஒருங்கிணைக்கப்படுகிறது.

சுற்றுலாத்துறை வேகமாக வளர்ந்து வரும் தொழிற்துறையாக மாறியுள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் 04 மாதங்களுடன் ஒப்பிடும் போது, 2024 ஆம் ஆண்டின் முதல் 04 மாத ங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 75 வீதத்திற்கும் அதிகமான வளர்ச்சி காணப்படுகின்றது. இந்த வருடத்தில் இதுவரை சுமார் 08 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

சுற்றுலாத் துறைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான விரிவான திட்டத்தை செயல்படுத்துவதில் அரசாங்கமும் தனியார் துறைகளும் ஈடுபட்டுள்ளன.

நமது வெளிநாட்டு முதலீட்டுத் துறையை வலுப்படுத்துவது நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியின் இன்றியமையாத பகுதியாகும். நம் நாட்டிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய முதலீடுகள் குறைவாக இருப்பதால், வெளிநாட்டு முதலீடுகள் நாட்டிற்குள் வர முறையான சட்டங்களும் நவீன நிறுவன கட்டமைப்பும் அவசியம். அந்த நோக்கத்திற்காக, தற்போதுள்ள பல நிறுவனங்களை இணைத்து புதிய பொருளாதார ஆணைக்குழுவை நிறுவுவது எமது எதிர்பார்ப்பாகும்" எனத் தெரிவித்துள்ளார்.

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு...**

**● நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பை நழுவ விடக்கூடாது.**

**● இன்று நாம் எவ்வாறு செயல்படுகிறோம் என்பதை வைத்தே எமது எதிர்காலம் தீர்மானிக்கப்படுகிறது.**

**இந்த இக்கட்டான நேரத்தில் நாட்டை விட்டு தனிப்பட்ட இலக்குகளை கருத்தில் கொண்டு செயற்படுவது மாபெரும் அழிவின் ஆரம்பமாகும்.**

ஆசிய கிண்ண கால்பந்து தகுதிகாண்:

# இலங்கை — கம்போடிய அணிகளுக்கு இடையே செப்டெம்பரில் 2 போட்டிகள்



2027 ஆசிய கிண்ண கால்பந்து தொடருக்கான தகுதிகாண் சுற்றின் மூன்றாவது சுற்றுக்கு தகுதி பெறுவதற்காக நடைபெறும் 'பிளே ஓப்' சுற்றில் இலங்கை அணியின் எதிராளியாக கம்போடிய கால்பந்து அணி தெரிவாகியுள்ளது.

இந்த சுற்றுக்கான எதிரணியை தேர்வு செய்யும் குலுக்கல் நிகழ்வு நேற்று முன்தினம் (09) கோலாலம்பூரில் ஆசிய கால்பந்து சம்மேளனத்தினால் நடத்தப்பட்டதோடு இதன்போதே இலங்கை அணியை எதிர்த்துப் போட்டியிடும் அணியாக கம்போடியா தெரிவானது.

பிளே ஓப் சுற்றுக்காக இலங்கை தவிர மங்கோலியா, கம்போடியா, மகாவு, புரூனாய், கிழக்கு திமோர் ஆகிய அணிகள் பங்கேற்பதோடு அந்த அணிகளில் பிஃபா தரவரிசையில் முன்னிலையில் இருக்கும் அணியாக கம்போடியா இருப்பது குறிப்பிடத்தக்கது. தற்போதைய தரவரிசையில் கம்போடியா 179 ஆவது இடத்தில் இருப்பதோடு இலங்கை 204 ஆவது இடத்தில் உள்ளது.

இரண்டு போட்டிகளைக் கொண்ட இந்த பிளே ஓப் சுற்றில் இலங்கை மற்றும் கம்போடிய அணிகள் எதிர்வரும் செப்டெம்பர் 05 ஆம் திகதி கொழும்பு, குதிரைப்பந்தய திடல் மைதானத்தில் மோதவிருப்பதோடு இதன் இரண்டாவது போட்டி செப்டெம்பர் 10 ஆம் திகதி கம்போடியாவில் நடைபெறவுள்ளது. அதன்படி அணி ஒன்று தமக்கு கிடைத்துள்ள எதிரணியுடன் இரண்டு போட்டிகளில் ஆடிய பின் வெற்றி பெறும் அணி 2027 ஆசிய கிண்ணத்திற்கு தகுதி பெறுவதற்கு மூன்றாவது சுற்றுக்கு முன்னேறும்.

இலங்கை கால்பந்து சம்மேளனம் மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்ட பின் கடந்த மார்ச் மாதம் இரு நட்புறவு போட்டிகளில் ஆடியதோடு அந்தப் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்த இலங்கையால் முடிந்தது.

# ஒலிம்பிக் தகுதி: இலங்கையின் மூன்று வீரர்கள் நாளை களத்தில்



பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறும் எதிர்பார்ப்புடன் இலங்கையின் மூன்று தடகள வீர, வீராங்கனைகள் ஜப்பானில் நாளை ஆரம்பமாகும் க்ரோன் பிரீ மெய்வல்லுனர் போட்டியில் பங்கேற்கின்றனர்.

பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் தருஷி கருணாரத்ன, பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் நதீஷா ராமநாயக்க மற்றும் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் காலிங்க குமாரகே ஆகிய மூவரும் பங்குபற்றவுள்ளனர்.

பாரிஸில் ஜுலை 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் பங்குபற்றுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அடைவு மட்டத்தை பதிவுசெய்வதற்கு எதிர்வரும் ஜுன் 30ஆம் திகதிவரை உலக மெய்வல்லுனர் சங்கத்தினால் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜுலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நடைபெறவுள்ள பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறுவதற்கான அடைவு மட்டத்தை இலங்கையின் எந்த தடகள வீரரும் இதுவரை எட்டவில்லை.

இந்த அடைவுக்காக கடந்த மே 3 ஆம் திகதி நடைபெற்ற டுபாய் கிராண்ட் பிரீ போட்டியில் இலங்கையின் நான்கு தடகள வீரர்கள் பங்கேற்றபோதும் அவர்களால் திறமையை வெளிப்படுத்த முடியாமல் போனது. குறிப்பாக இலங்கையின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரர் யுபுன் அபேகோன் ஆண்களுக்கான 100 மீற்றரில் 3ஆவது இடத்தையும், நதீஷா ராமநாயக்க பெண்களுக்கான 400 மீற்றரில் 2ஆவது இடத்தையும் பிடித்தனர்.

## சர்ச்சை விளம்பரம்: ஆப்பிள் மன்னிப்பு

ஆப்பிள் நிறுவனத்தின் புதிய ஐபாட் விளம்பரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.




இசைக் கருவிகள், கலைப்படைப்புகள், நூல்கள் நொறுக்கப்படுவதைக் காட்டும் அந்த விளம்பரத்துக்கு ஆப்பிள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டது.

அதிநவீன செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி அக்கறைகளை எழுப்பியிருக்கும் வேளையில் அந்த விளம்பரம் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

மனிதர்கள் உருவாக்கிய படைப்புகள் நொறுங்குவதை விளம்பரம் தத்ரூபமாகக் காட்டியது. புத்தாக்கத்தைக் கொண்டாடுவதே விளம்பரத்தின் குறிக்கோள் என ஆப்பிள் கூறியது.

விளம்பரம் சர்ச்சையை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கவில்லை என்று அது தெரிவித்தது. அந்த விளம்பரத்தைத் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்புச் செய்ய அது திட்டமிட்டிருந்தது. இப்போது அதைக் கைவிட்டதாக ஆப்பிள் கூறியது.

## யூரோவிஷன் இறுதிக்கு இஸ்ரேல் முன்னேற்றம்



காசா போருக்கு எதிரான பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் சுவீடனில் நேற்று முன்தினம் (09) நடந்த யூ ரோ வி ஷன் பாடல் போட்டியில் இறுதிப் போட்டிக்கு இஸ்ரேல் தகுதி பெற்றது. மாமோ நகர அரங்கில சுமார் 9,000 பார்வையாளர்கள் முன்னிலையில் பாடலை இசைத்த இஸ்ரேலிய பாடகி ஈடன் கோலன் இன்று (11) நடைபெறும் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். பார்வையாளர்கள் வாக்குகள் அடிப்படையிலேயே அவர் தகுதி பெற்றுள்ளார்.

1973 ஆம் ஆண்டு தொடக்கம் யூரோவிஷன் போட்டியில் பங்கேற்கும் இஸ்ரேல் அதில் நான்கு முறை வெற்றியீட்டியுள்ளது.

## வீழ்ச்சி கண்டது பாக். பணவீக்கம்

பாகிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட வாராந்த மதிப்பீட்டில் பணவீக்கத்தில் ஒரு சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருப்பது புள்ளிவிபரவியல் பணியகத்தின் விலைச்சுட்டி தரவுகளில் தெரிய வந்துள்ளது.

ஒருங்கிணைந்த பாவனையாளர் குழுக்கள் மத்தியில் நடாத்தப்பட்ட வாராந்த மதிப்பீட்டிலேயே பணவீக்கத்தில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகப் புள்ளிவிபரவியல் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வாரம் 320.14 புள்ளிகளில் காணப்பட்ட விலைச்சுட்டி, இவ்வாரம் 316.95 புள்ளிகளுக்கு வீழ்ச்சி அடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள இப்பணியகம் கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் ஒருங்கிணைந்த பாவனையாளர் குழுக்கள் மத்தியில் விலைச்சுட்டி 24.37 சதவீத அதிகரிப்புக்கு உள்ளாகி இருந்தது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை பாகிஸ்தான் பாற்பண்ணையாளர்கள் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைய பசும்பால் லீட்டருக்கு பத்து சத வீத விலை அதிகரிப்பை மேற்கொள்ள கராச்சி நகர ஆணையாளர் அனுமதி அளித்திருப்பதாக பால் பண்ணையாளர்கள் சங்கத்தின் கராச்சியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச செய்திகள்

# காசா போர் நிறுத்தப் பேச்சு உடன்பாடு இன்றி முடிவு: ரபாவில் கடும் தாக்குதல்

## இஸ்ரேலிய முன்னேற்றத்தால் 110,000க்கும் அதிகமானோர் வெளியேற்றம்

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவது தொடர்பில் இழுபறியுடன் எகிப்து தலைநகர் கெய்ரோவில் இடம்பெற்று வந்த பேச்சுவார்த்தை உடன்பாடு ஒன்று இல்லாமல் முடிவடைந்த நிலையில், காசா மீது இஸ்ரேல் நேற்றும் (10) தனது தாக்குதல்களை தொடர்ந்தது.

எகிப்துடனான எல்லையில் இருக்கும் தெற்கு நகரான ரபாவில் நேற்று பீரங்கி தாக்குதல்களை நடத்திய இஸ்ரேலிய இராணுவம், மேலும் வடக்காக காசா நகரில் வான் தாக்குதல்களை நடத்தியதோடு அங்கு கடும் மோதல்களும் இடம்பெற்றதாக அங்குள்ள ஏ.எப்.பி. செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு நாட்கள் இடம்பெற்ற மறைமுக போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் பேச்சுவார்த்தை குழுக்கள் கடந்த வியாழக்கிழமை (09) கெய்ரோவை விட்டு வெளியேறியதாக எகிப்து உளவுப் பிரிவுடன் தொடர்புபட்ட அல் கெஹர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

காசாவில் ஆட்சி புரியும் ஹமாஸ் அமைப்பின் அரசியல் தலைமை உள்ள கட்டாருக்கு தமது பேச்சுவார்த்தைக் குழுவினர் சென்றிருப்பதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

'பேச்சுவார்த்தை நடத்தும் பிரதிநிதிகள் கெய்ரோவில் இருந்து டோஹா சென்றுள்ளனர். மத்தியஸ்தர்களால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவை ஆக்கிரமிப்பாளர்கள் (இஸ்ரேல்) நிராகரித்ததோடு பல முக்கிய விடயங்களில் அவர்கள் எதிர்ப்பை வெளியிட்டனர்' என்று ஹமாஸ் அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'அதன்படி பந்து இப்போது முழுமையாக ஆக்கிரமிப்பாளர்கள் கையிலேயே உள்ளது' என்றும் அது கூறியது.

மத்தியஸ்தர்கள் முன்வைத்த போர் நிறுத்த முன்மொழிவு ஒன்றுக்கு ஹமாஸ் அமைப்பு கடந்த திங்கட்கிழமை இணங்கியபோதும் அந்த முன்மொழிவு தமது நிபந்தனைகளுக்கு அப்பால் இருப்பதாக இஸ்ரேல் நிராகரித்திருந்தது.

காசாவில் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றுக்கு ஹமாஸ் வலியுறுத்தும் நிலையில் அதனை நிராகரிக்கும் இஸ்ரேல் ஹமாஸ் அமைப்பை ஒழிப்பதாக கூறி வருகிறது.

இந்நிலையில் உடன்படிக்கை ஒன்றுக்கு இன்னும் வாய்ப்பு இருப்பதாக நம்பிக்கை தெரிவித்திருக்கும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு கௌன்சில் பேச்சாளர் ஜோன் கிர்பி, ஆனால் அது இரு தரப்பினதும் 'தலைமைத்துவம்' மற்றும் 'தார்மீக துணிச்சலிலேயே' தங்கியுள்ளது என்றார்.

காசாவில் போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிக்கும் உடன்படிக்கை ஒன்றை எட்ட வேண்டுமானால், ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் 'நெகிழ்வு போக்கை' காண்பிக்க வேண்டும் என்று எகிப்து வெளியுறவு அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

போர் நிறுத்த முயற்சியில் பங்கேற்றிருந்த அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. தலைவர் வில்லியம் பர்னும் நேற்று மத்திய கிழக்கில் இருந்து அமெரிக்கா திரும்பியதாக வெள்ளை மாளிகை கூறியது.

'இதனால் பேச்சுவார்த்தை தொடராது என்று அர்த்தம் கொள்ள முடியாது' என்று வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு கௌன்சில் பேச்சாளர் ஜோன் கிர்பி கூறினார்.

**ரபாவில் அவதானம்**

கடந்த எட்டு மாதங்களாக நீடிக்கும் காசா போரில் அண்மைய வாரங்களாக ரபா மீதான அவதானம் அதிகரித்துள்ளது. காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் இந்த பகுதி மீதான தரைவழி நடவடிக்கைக்கு இஸ்ரேல் தயாராகி வரும் சூழலில் சர்வதேச அளவில் கவலை அதிகரித்துள்ளது.

ரபா மீது படையெடுத்தால் இஸ்ரேலுக்கான ஆயுதங்களை நிறுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்தபோதும், இஸ்ரேல் தனியாக நின்று செயற்படும் என்று பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உறுதி அளித்துள்ளார்.

'எமக்குத் தேவையென்றால் நாம் தனியாக நிற்போம். அவசியம் என்றால் எமது விரல் நகத்தால் கூட போராடுவோம்' என்று நெதன்யாகு கூறினார்.

ரபா மீதான படையெடுப்பு பாரிய உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தும் என்ற அச்சம் இருந்தபோதும், இஸ்ரேல் அங்கு கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த மட்டுப்படுத்தப்பட்டது என்று குறிப்பிடும் படை நடவடிக்கை காரணமாக ஏற்கனவே ஆயிரக்கணக்கானவர்கள் வெளியேறியுள்ளனர்.

ரபாவின் கிழக்கு பகுதியை நோக்கி இஸ்ரேலிய துருப்புகள் முன்னேற ஆரம்பித்தது தொடக்கம் அந்த நகர் மீதான உக்கிர தாக்குதல்களுக்கு மத்தியில் இதுவரை 110,000 பலஸ்தீனர்கள் வெளியேறி இருப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அந்த மக்கள் எங்கு போனாலும் தொடர்ந்து இஸ்ரேலிய தாக்குதல் அச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்து வருவதாகவும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. 'காசாவில் எந்த இடத்திலும் பாதுகாப்பு இல்லை என்பதோடு வாழ்க்கை நிலை கொடூரமாக உள்ளது' என்று குறிப்பிட்ட ஐ.நா நிறுவனம், அவசர போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தது.

இந்நிலையில் டெயிர் அல் பலா உட்பட இஸ்ரேல் பாதுகாப்பு வலயங்களாக புதிதாக அறிவித்திருக்கும் இடங்களில் தப்பி வரும் மக்கள் நிரம்பி வருகின்றனர். அங்கு மக்கள் தாம் தங்குவதற்கு வசதியாக கூடாரங்களை அமைத்து வருகின்றனர்.

இதனால் டெயிர் அல் பலாவில் மக்கள் தங்குவதற்கு இடங்கள் தீர்ந்து வருவதோடு அங்கு நீர் உட்பட வசதிகளும் தீர்ந்து வருவதாக கூறப்படுகிறது.

இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்கள் நீடிப்பதால் ரபா எங்கும் உள்ள மருத்துவமனைகளில் இருந்து சிகிச்சை பெற முடியாத நிலையில் நோயாளர்கள் மற்றும் காயமடைந்தவர்களும் வெளியேறி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

'எம்மிடம் படுக்கைகள் இல்லை. குறிப்பாக ஆபத்தான நோயாளர்களுக்கு பரிந்துரைக்க மருத்துவமனைகளும் இல்லை' என்று பலஸ்தீன மருத்துவரான முஹமது சகூத், அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு குறிப்பிட்டார்.

ரபாவில் உள்ள எகிப்துடனான எல்லைக் கடவையை கைப்பற்றிய இஸ்ரேல் காசாவுக்கு உதவிகள் செல்வதற்கான அந்த பிரதான வழியையும் மூடியுள்ளது. இந்நிலையில் ரபா நகரில் உணவு மற்றும் எரிபொருட்கள் தீர்ந்து வருவதாக ஐ.நா. அமைப்பு எச்சரித்துள்ளது.

'ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எந்த உதவியும் காசாவுக்குள் வருவதில்லை. உதவி, எரிபொருள், விநியோகங்கள் எதுவும் இல்லை. எமது கடைசி கையிருப்புகளும் இறுதிக் கட்டத்தில் உள்ளன. நாம் வழங்கி வரும் மாவு சிறிது நாட்களுக்கே உள்ளது. எரிபொருள், நீர் இன்றி மிக விரைவில் அனைத்தும் முடங்கிவிடும். நிலைமை மிக மோசமாக உள்ளது.' என்று பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் திட்டமிடல் பணிப்பாளர் சாம் ரோஸ், அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு தெரிவித்தார்.

**ஐ.நா. நிறுவனம் மீது தீ**

கிழக்கு ஜெரூசலத்தில் உள்ள பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தின் தலைமையகம் இருக்கும் வளாகத்தின் மீது இஸ்ரேலிய குடியிருப்பாளர்கள் நேற்று முன்தினம் இரு தடவைகள் தீ வைத்து தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் அந்த வளாகத்தின் வெளிப் பகுதிகளில் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று இந்த நிறுவனத்தின் தலைவர் பிலிப்பே லசரினி 'எக்ஸ்' சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'மீண்டும் ஒருமுறை ஐ.நா. பணியாளர்களின் உயிருக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது' என்று சுட்டிக்காட்டிய அவர், பாதுகாப்பு உறுதி செய்யப்படும் வரை அந்த வளாகத்தை மூடுவதற்கு தீர்மானித்ததாகவும் தெரிவித்தார்.

இந்த வளாகத்திற்கு வெளியில் கூடிய ஆயுதம் ஏந்திய இஸ்ரேலிய குடியேறிகள் 'ஐக்கிய நாடுகளை தீயில் பொசுக்கு' என்று கோசம் எழுப்பியே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

பலஸ்தீன அகதிகளுக்கான உதவிகளை வழங்கி வரும் இந்த நிறுவனத்தை கலைப்பதற்கு இஸ்ரேல் அரசு அழைப்பு விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மறுபுறும் இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்கள் தொடரும் நிலையில் கான் யூனிஸின் புறநகர் பகுதி ஒன்றான அபசான் அல் கபிர் சிறு நகரில் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதலில் ஒரே குடும்பத்தின் எட்டுப் பேர் கொல்லப்பட்டதாக அங்கிருக்கும் அல் ஜசீரா செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

ரபாவில் இருந்து பலஸ்தீனர்கள் தப்பி வரும் பகுதியாக இருக்கும் கான் யூனிஸ் மீது இஸ்ரேல் தொடர்ந்தும் கடும் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

மத்திய காசா நகரில் உள்ள யார்புக் வீதியில் அப்தல் ஆல் குடும்பத்திற்கு சொந்தமான வீட்டின் மீது நேற்று அதிகாலை நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதல்களில் மூவர் கொல்லப்பட்டு மேலும் ஐவர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன உத்தியோகபூர் செய்தி நிறுவனமான வபா கூறியது.

முன்னதாக கடந்த வியாழக்கிழமை இரவு மேற்கு தால் அல் சுல்தான் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் மூன்று சிறுவர்கள் உட்பட குறைந்தது ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் ஒரு வயது குழந்தையும் இருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்நிலையில் காசாவின் கிழக்கு புறநகர் பகுதியில் இஸ்ரேல் படைகளை இலக்கு வைத்து மோட்டார் குண்டுகள் மற்றும் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை பயன்படுத்தி தாக்குதல் நடத்தியதாக ஹமாஸ் மற்றும் பலஸ்தீன இஸ்லாமி ஜிஹாத் அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன. ரபாவின் கிழக்கில் இஸ்ரேலிய இராணுவ வாகனங்களுக்கு கீழால் கண்ணி வெடி வைத்து சுரங்கப்பாதை ஒன்றை வெடிக்கச் செய்ததாக ஹமாஸ் தெரிவித்துள்ளது. இந்த வெடிப்பில் மூன்று வீரர்களுக்கு சிறு காயம் ஏற்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்து வெடித்த காசா போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 35 ஆயிரத்தை நெருங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 11ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# க.பொ.த. சாதாரணதர பரீட்சையின் பின் 02 வாரங்களில் உயர்தர வகுப்பு ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை நிறைவடைந்து இரண்டு வாரங்களில் க.பொ.த. உயர்தர வகுப்புகள் ஆரம்பமாகும் என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார் .

மாணவர்கள் க.பொ.த. சாதாரணதர பரீட்சையின் பின்னர் உயர்தர வகுப்பு ஆரம்பிக்கும் வரை டியூஷன் வகுப்புகளுக்கு செல்லும் நிலையில் க.பொ.த. சாதாரணதரம் நிறைவுற்றதும் உடனடியாகவே உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்படும் போது எதிர்கொள்ளக்கூடிய சிக்கல்களை நிவர்த்தி செய்வதற்கு மாற்று முறைமையொன்று காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று பி.வை.ஜி. ரத்னசேகர எம்.பி. எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

பெற்றோர்களின் மேற்படி தீர்மானம் தொடர்பில் சிறந்த வரவேற்பு கிடைத்துள்ள நிலையில் அது தொடர்பில் ஆசிரியர் சங்கங்களுக்கு அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இம்முறை கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு உயர்தரத்தில் பாடசாலையில் அனுமதி பெற்றுக்கொள்ள முடியும் என்றும் பெறுபேறுகள் கிடைத்ததும் அதில் மாற்றங்களை மேற்கொள்ள முடியும் என்றும் அந்த வகையிலேயே இவ்வாறான தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அந்த வகையில் கல்வி பொதுத்தராதர சாதாரணதர பரீட்சையின் பெறுபேறுகளில் ஐந்து அல்லது 10 விதமான பெறுபேறுகளே வித்தியாசமாக அமைய முடியும். அந்த மாற்றங்களுக்கு இணங்க உயர்தரத்தில் கல்வி கற்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில்

# IMF உட்பட சர்வதேச நாடுகள் எதுவும் ஒருபோதும் அதிருப்தி வெளியிட்டதில்லை

பாராட்டுக்களையே தெரிவித்துள்ளன

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் உட்பட சர்வதேச நாடுகள் மற்றும் அமைப்புகள் பாராட்டுக்களை தெரிவித்துள்ளனவே தவிர ஒருபோதும் அதிருப்தி வெளியிடவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அந்த வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வரும் செயற்பாடுகள் மற்றும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் உட்பட சர்வதேச நாடுகள் மற்றும் நிறுவனங்கள் அவ்வப்போது பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனவே தவிர ஒருபோதும் அதிருப்தி வெளியிடவில்லை என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் பொய் கூறுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்), (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் .

அது தொடர்பில் மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

"பொருளாதார மேம்பாட்டுக்காக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வரும் தீர்மானங்கள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் அதிருப்தி தெரிவித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் குறிப்பிட்டார். அவரது அந்தக் கூற்று முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. உண்மையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு சர்வதேச நாடுகள் மற்றும் அமைப்புகள் பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# பெருந்தோட்ட மக்களுக்கு நல்லது நடக்குமாயின் ஆதரவு வழங்க தயார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மலையக பெருந்தோட்ட மக்களுக்கு நல்லது நடக்குமாயின், அதற்கு முழுமையான ஆதரவு வழங்கத் தயாராக உள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

எனினும் மலையக பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் தோல்வியடைந்தன என்பதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற காப்பு, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்), ( திருத்தச்) சட்ட மூலம் மீதான விவாதத்தில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்ட விடயங்களை அடிப்படையாக வைத்து உரையாற்றுகையிலேயே மனோ கணேசன் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

"இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்களை கொண்டு எமது மக்களின் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றன. பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது.

பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் சபையில் தெரிவிக்கப்படும் விடயங்களை உன்னிப்பாக அவதானித்தேன்.அவை கற்பனைக் கதைகள் என நான் குறிப்பிடவில்லை.

எமது மக்களுக்கு நல்லது நடக்குமாயின் நாம் அதனை எதிர்க்கப் போவதில்லை. முழுமையாக அதற்கு ஆதரவு வழங்குவோம்.

தும்பற தோட்டத்தில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்கள் பெருந்தோட்ட கம்பனிகளின் பாதுகாவலர்களாக செயற்படுகிறார்கள்.

இவர்கள் மூலமாக எமது மக்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இரத்தினபுரி, களுத்துறை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இவ்வாறான நிலையே காணப்படுகிறது. தொழிலமைச்சர் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

பெருந்தோட்ட மக்களின் நாட் சம்பளத்தை 1700 ஆக வழங்குவதாக குறிப்பிட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து முதலாளிமார் சம்மேளனம் நீதிமன்றம் செல்வதாக குறிப்பிட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டுக்கு பின்னர் முறையாக சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. 1700 சம்பளம் கிடைக்கப் பெற்றால் நாங்கள் அதனை எதிர்க்கப்போவதில்லை. முழுமையான ஆதரவு வழங்குவோம். ஆனால் அது கிடைக்குமா என்பது தற்போதைய பிரச்சினையாக உள்ளது. ஆரம்ப காலத்தில் சுமார் 10 இலட்சம் பேர் பெருந்தோட்ட தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். ஆனால் தற்போது சுமார் ஒன்றரை இலட்சம் பேர் மாத்திரமே தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். ஆகவே பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள பிரச்சினைகளுக்கு முறையாக தீர்வு காண அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

நீதிமன்ற தீர்ப்புகள் தடையாக அமையாவிடின்

# ஆசிரியர் வெற்றிடங்களை விரைவில் நிரப்ப முடியும்

சபையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நீதிமன்ற தீர்ப்புகள் தடையாக அமையாவிட்டால் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்க முடியும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். 23,000 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்காக நாம் முன்னெடுத்த நடவடிக்கைகள் ஒரு தரப்பினர் நீதிமன்றத்திற்கு சென்று மேற்கொண்டுள்ள நடவடிக்கையால் கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் இன்றுவரை தடையாக உள்ளது என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், நீதிமன்ற தீர்ப்புகள் தடையாக அமையாவிட்டால் ஆசிரியர் நியமனங்களை விரைவாக வழங்க முடியும் என்றும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் தனது கேள்வியின் போது,

மேல் மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. 2951 பேருக்கு இதுவரை ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. எவ்வாறெனினும் 6000க்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் மேல் மாகாணத்தில் காணப்படுகின்றன. அதேவேளை, வணிகத்துறை பட்டதாரிகள் 1200ற்கும் மேற்பட்டவர்கள் உள்ள நிலையில் அவர்கள் எவருக்கும் இந்த ஆசிரியர் நியமன வேலைத்திட்டத்தின் போது நியமனங்கள் வழங்கப்படவில்லை.

அது தொடர்பில் கல்வியமைச்சர் உரிய கவனம் செலுத்தி விரைவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

அதற்குப் பதிலளித்த கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த, "நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களிலுமிருந்து 23 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் நாம் விண்ணப்பங்கள் கோரியிருந்தோம் அதன்போது 52,000 பேர் அதற்காக விண்ணப்பித்திருந்தனர்.

அவர்களுக்கு எழுத்து மூலம் பரீட்சை நடத்தப்பட்டது. ஆசிரியர் சேவை யாப்பிற்கு இணங்க கடந்த வருடம் மார்ச் மாதம் நாம் தயாராக இருந்தோம். அட்மிஷன் அட்டைகளையும் நாம் அனுப்பியிருந்தோம். அந்த நிலையிலேயே 33 பேர் நீதிமன்றத்திற்கு சென்று அதனை சவாலுக்கு உட்படுத்தினார் என்றார்.

# சைவ மங்கையர் வித்தியாலய மாணவ தலைவியர் ஒன்றியத்தின் இலவச மருத்துவ முகாம்







**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய மாணவ தலைவியர் ஒன்றியம் 2024 ஏற்பாடு செய்த "MELIOR" இலவச மருத்துவ முகாம் அண்மையில் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த நேபொட பகுதிகளிலுள்ள அரபலாகந்த பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்த மருத்துவ முகாமில் நெபொட பகுதியிலுள்ள 09 பெருந்தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 750 கலந்து கொண்டு பலன் பெற்றனர். கண், தோல், பல், மகப்பேறு, இரத்த பரிசோதனை செய்து பல நோய்களுக்கு மருந்துகளும் வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாட்டை கணபதி அறநெறி பாடசாலை பொறுப்பாளர் ஆர். தனராஜ், அரபலாகந்த பாரதி தமிழ் மகா வித்தியாலய அதிபர் கே. இராஜரட்ணம் செய்துள்ளதால், இந்த செயற்பாடுகளுக்கு அனுசரணைகளை சைவ மங்கையர் அதிபர் அருந்ததி இராஜ விஜயன் தலைமையில் விசேட வைத்திய நிபுணர்கள் வைத்தியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்த மருத்துவ முகாம் மூலம் பலர் நன்மையடைந்துள்ளனர். இம்மாதிரியான மருத்துவ முகாமை மலையக பெருந்தோட்ட மக்களுக்கு செய்ததையடுத்து கலந்து கொண்ட மக்கள் கருத்து கூறுகையில், சைவ மங்கையர் வித்தியாலய மாணவ தலைவியர் ஒன்றியத்துக்கும் அப்பாடசாலை அதிபருக்கும் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் இதில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.

# களுத்துறை மாவட்ட முஸ்லிம் முன்னணிகள் சம்மேளன கூட்டம்



**பேருவளை பீ.எம்.முக்தார்**

களுத்துறை மாவட்ட முஸ்லிம் முன்னணிகள் சம்மேளன கூட்டம் மக்கொனை இந்திரிலிகொடையில் உள்ள ஏ.எஸ்.எம்.பவுஸி ஹாஜியாரின் இல்லத்தில் மாவட்ட தலைவர் எம்.எம்.ஜௌபர் தலைமையில் நடைபெற்றது.

தொழிலதிபர் அல்ஹாஜ் பவ்ஸ் விசேட பேச்சாளராக கலந்து கொண்டார்.

சமூகத்தில் ஊடகவியலாளர்களை உருவாக்கும் நோக்கில் பிரதேச பாடசாலை மாணவர்களை தெரிவு செய்து ஊடகச் செயலமர்வொன்றை நடத்துதல் பற்றியும் பாடசாலைகளில் நிலவும் பலத்த ஆசிரியர் தட்டுப்பாடு தொடர்பில் மேல்மாகாண ஆளுநர் ரொஷான் குனத்திலக்கவை சந்திப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் பங்கு பற்றிய உறுப்பினர்கள் தத்தமது பகுதியில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் தேவைகள் குறித்தும் சுட்டிக்காட்டினர்.


பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், பிரதேச சபை முன்னாள் தலைவர் ஏ.ஆர்.எம்.பதியுத்தீன், பாணந்துறை பிரதேச சபை முன்னாள் எதிர் கட்சித் தலைவர் தாஹிர் பாஸி,காதி நீதிபதி எம்.எல். ஏ.எம்.அஹ்லா உட்பட பலரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# சர்வதேச மனித உரிமைகள்



கண்டி மாவட்ட சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட தேவையுள்ளவர்களுக்கான புத்தாண்டு விளையாட்டு நிகழ்வு அண்மையில் கண்டி பௌத்த மண்டபத்தில் நடைபெற்றது. விசேட தேவையுடையவர்களின் உரிமைக்காக நாம் அமைப்பின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட அங்கத்தவர்கள் கலந்துகொண்டார்கள். இந்நிகழ்வில் சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மையத்தின் பணிப்பாளர் ரிஸ்வான் காசிம் மற்றும் உறுப்பினர்களும் ஸ்ரீ லங்கா சுகந்திரக் கட்சி கண்டி மாவட்ட அமைப்பாளர் தேசகீர்த்தி எம் . தீபனும் கலந்து கொண்டார்கள் .



கண்டி, மகியாவ அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின் மூன்று தள இராஜ கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டு விழா எதிர்வரும் 23ஆம் திகதி (வியாழக்கிழமை ) காலை 10 . 30 மணிக்கு நடைபெற இருக்கின்றது. இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைவரும் அழைக்கப்படுகின்றார்கள். (தகவல் : மு . தீபன்)